பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Selliah Sivapathalingam
GEM & JEWELS MERCHANT
218H, Kasthuriar Road, JAFFNA.
T. Phone: 23794

# உதயன்

விலை ரூ 2/50

செல்லையா சிவபாதலிங்கம்
தங்க வைர நகை வியாபாரம்
218 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 சரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சுடர்: 4 சுக்கில ஆவணி மீ 18 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 2 (03 - 09 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 233

# எதிர்க் கட்சிகள் சேர்ந்து ஒருநிலைப்பட முயற்சி!

## இணக்கத்தை உருவாக்க பேச்சு!

கொழும்பு, செப். 4

நாட்டின் அரசியல் நிலைமை தொடர்பாக ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தி, ஒருநிலைப்படும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றன.

இது தொடர்பாக முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களிடையே பல மட்டத்திலும் நேற்றுத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, ஒரே அணியில் நிற்க வேண்டும் என்பதில் முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் கண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

தென்பகுதி தீவிரவாதிகளின் போக்கு, அவர்களைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள், எதிர்க்கட்சிகள் இது தொடர்பாக கையாள வேண்டிய நிலைப்பாடு, இந்திய அமைதிப்படை விவகாரம் ஆகியவை தொடர்பாகவே ஒருமித்த கருத்து உருவாக வேண்டும் என முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் விரும்புகிறார்களாம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உவர் முதலியாரும் நைஸா பாதை மாறுகிறார் போலே...!

# அரசமைப்பை உடனே சீர்திருத்தி பொதுத்தேர்தலை நடத்த வேண்டும்!

## அதன் மூலமே நாட்டில் அமைதி என்கிறார் லலித்

லண்டன், செப் 3

நாட்டின் அரசமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து புதிதாக பொதுத்தேர்தலை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டில் அமைதி ஏற்பட வழி உண்டாகும்.

—இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி வெளிநாட்டுச் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய அரசமைப்பின் கீழ் நிர்வாக அதிகாரங்கள் பெற்ற அரசுத் தலைவருக்கு வழக்கமான கட்டுப்பாடுகள் இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவது நாட்டில் அமைதியைக் கொண்டு வரும் என்றால் அப்படிப்பட்ட மாற்றங்களை அறிமுகப்படுத்துவதில் தயக்கம் காட்டக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### ஊரிக்காட்டில் குண்டுச் சத்தம்

வல்வெட்டித்துறை, செப். 3

நேற்று முன்தினம் இரவு 10-45 மணியளவில் வல்வெட்டித்துறை ஊரிக்காடு முகாமிலிருந்து பெரும் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இதையடுத்து இரவு நேரத்தில் 'பரா' வெளிச்சக் குண்டுகளும் ஏவிவிடப்பட்டன.

இரவில் கேட்ட பெரும் குண்டுச் சத்தங்களினால் பீதியுற்ற பொதுமக்கள் இப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தனர். (உ-160)

### பருத்தித்துறையில் தேடுதல்

வல்வெட்டித்துறை, செப். 3

நேற்று அதிகாலை முதல் பருத்தித்துறைப் பகுதியில் பலத்த தேடுதல் வேட்டை இடம்பெற்றது.

இதனால் போக்குவரத்து சேவைகள் மந்திகை, மாலிசந்திப்பகுதியிலிருந்தே நேற்று நடைபெற்றன. (உ-160)

### தொண்டமானாறில் இளைஞர் சடலம்

வல்வெட்டித்துறை, செப். 3

தொண்டமானாறு பிள்ளையார் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கிடக்கக் காணப்பட்டது.

உயிரிழந்தவர் தொண்டமானாறைச் சேர்ந்த திருச்செல்வம் துரை (வயது-24) என அடையாளம் காணப்பட்டது. (உ-160)

### கொற்றுவத்தையில் நேற்று மோதல்

வல்வெட்டித்துறை, செப். 3

நேற்று நண்பகல் வடமாராட்சி கொற்றுவத்தையில் நேரடி மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இதனையடுத்து ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இதனால் பொதுமக்கள் அப்பகுதியைவிட்டு இடம் பெயர்ந்தனர்.

மோதல் மற்றும் தாக்குதல் சம்பவங்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி உறுதிப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-160)

### யாழ் - மன்னார் நேரடி பஸ்சேவை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 3

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கவிருந்த சேரதீவு ஊடான யாழ்—மன்னார் நேரடி பஸ் சேவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கேரதீவு — சங்குப்பிட்டி இறங்கு துறைகளுக்கிடையே சேவையிலீடுபடும் பாதையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அடுத்தே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இச்சேவை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-9)

### மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 3

நேற்று பிற்பகல் கொடிகாமம் சந்திக்கு அண்மையில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. (உ-9)

### காயம்

யாழ்ப்பாணம், செப். 3

நேற்று பிற்பகலில் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இடையில் சிக்கி ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் கோண்டாவிலைச் சேர்ந்த நடராஜா சந்திரராஜா (வயது 41) எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### மன்னார் அரச அதிபர் செபநாயகம்

மன்னார், செப் 3

மன்னார் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஏ. ஸி. செபநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஏ. ஸி. செபநாயகம் இதுவரை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி வகித்து வந்தார்.

மன்னார் அரச அதிபராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ். எஸ். தர்மபாலன் யாழ்ப்பாணத்துக்கு இடம் மாற்றமாகி உள்ளது தெரிந்ததே. (அ)

### இளைஞர் சடலம்

கோப்பாய், செப் 3

கோப்பாய் — உரும்பராய் வீதியில் அமைந்துள்ள மதகு ஒன்றுக்கு அண்மையில் நேற்று நண்பகல் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று கிடக்கக் காணப்பட்டது.

சூட்டுக் காயங்களுடன் கிடந்த இச் சடலத்தில் உயிரிழந்தவர் கலட்டியைச் சேர்ந்த இரவீந்திரன் (பொன்னையா) என்ற பெயர் எழுதப்பட்ட அட்டை ஒன்றும் காணப்பட்டது. (உ-72)

### அரச கட்டடங்கள் தீயினால் நாசம்

கொழும்பு செப். 3

களுத்துறை மாவட்டத்தில் மூன்று அரசாங்க கட்டடங்கள் தீயிட்டு நாசமாக்கப்பட்டன.

மத்துகம உதவி அரச அதிபர் காரியாலயம், அகலவத்தை தபாலகம் மற்றும் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஆகியவையே தீயினால் நாசமாகின. (உ)

### இராணுவத்தினர் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில்

கொழும்பு, செப். 3

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பது குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

கொழும்பில் இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டது. (அ-எ)

### 62 பேர் பலி!

கொழும்பு, செப் 3

கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் தென்பகுதி வன்செயல்களின்போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை 62 என்று வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது. (உ-எ)

### உணவுப் பொருள் கையிருப்பில்

கொழும்பு, செப். 3

போதுமான அளவு உணவுப்பொருள் கையிருப்பில் இருப்பதாக உணவுத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

அரசக் களஞ்சியங்களில் 87 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியும், 37 ஆயிரம் தொன் மாவும் இருப்பதாக திணைக்களப் பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். (உ-எ)

### கும்பாபிஷேகம் கர்மாரம்பம்

யாழ்ப்பாணம், செப் 3

அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மாலை 6 30 மணிக்கு விநாயகர் வழிபாடுடன் கிரியைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று எதிர்வரும் 7ஆம் திகதி கும்பாபிஷேகம் இடம் பெறும்.

(சிறப்பிதழ் உள் பக்கத்தில)

### மகாவலி கங்கையில் மிதக்கும் சடலங்கள்!

கொழும்பு, செப். 3

பேராதனை, கட்டுகாஸ்தோட்டை, பொல்கொல்லை ஆகிய மகாவலி கங்கைப் பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக பல சடலங்கள் மிதந்து செல்வதையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்து உள்ளனர்.

நாளொன்றுக்குச் சராசரியாக மூன்று அல்லது நான்கு சடலங்களைக் காண்பதாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தென்னக்கும்புர பாலத்துக்கு அடியில் சாக்குகளில் போட்டுக் கட்டப்பட்ட நிலையிலும் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் மற்றும் வெட்டுக் காயங்களுடனும் சடலங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் ஆற்றுநீரைப் பருகுவதையும் அதில் குளிப்பதையும் மக்கள் தவிர்த்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### கள்ளப்பாடு-சிலாவத்தை பகுதிகளில் ஷெல் தாக்குதல்

#### சுற்றி வளைத்துத் தேடுதல்

முல்லைத்தீவு, செப். 3

முல்லைத்தீவு தெற்குப் பகுதியான கள்ளப்பாடு, சிலாவத்தைப் பகுதிகளில் நேற்று ஷெல் தாக்குதல்களும் பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலை 2-00 மணி முதல் காலை 7 00 மணி வரை இச்சம்பவங்கள் நீடித்தன.

இதனைத் தொடர்ந்து நாற்பக்கமான படையினர் அப்பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின் போது முல்லைத்தீவு பெருந் தெருக்கள் காரியாலயச் சந்திக்கு அப்பால் மக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. (இ-92)

### சுபநேரம்

(03 - 9 - 1989)

ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை நக்ஷத்திரம்: அத்தம் சுபநேரம்:

9-05 முதல் 10-35 வரை ராகுகாலம்:

04-35 முதல் 06 05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### வன்செயல்களைக் கைவிட எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, செப். 3

வன்செயல்களில் ஈடுபட்டுள்ள சகல தரப்பாரும் அவற்றைக் கைவிட வேண்டும்: முதலில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய சோசலிஷ அணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் சார்பில் கூட்டறிக்கையில் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முதலில் கையொப்பமிட்டுள்ளார்.

இந்திய அமைதிப்படை இந்த நாட்டைவிட்டு விலகிச் செல்ல வேண்டும். வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்

(8 ஆம்பக்கம் பார்க்க)

### மாத்தளையில் கண்ணி! 6 சிப்பாய்கள் பலி!!

மாத்தளை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிலக் கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர். கொழும்பின் புறநகர்ப் பகுதி ஒன்றில் ரோந்து சென்ற ராணுவப் பிரிவை நோக்கி தீவிரவாதிகள் நேற்று சுட்டனர்.

அதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார்; நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர். (உ-எ)

### 12 தீவிரவாதிகள் சரண்! அரசு அறிக்கையில் தகவல்

கொழும்பு. செப் 3

கடந்த 24 மணிநேரத்தில் பன்னிரண்டு தீவிரவாத சந்தேக நபர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர் என்று அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 70 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பம்பலப்பிட்டி வனாத்தமுல்லைப் பகுதிகளில் மட்டும் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 44 என்று தெரிவிக்கப்பட்டது.

தெற்குப்பகுதியில் வாகனம் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் 4 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

ரத்மலானையில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. (உ-எ)

### திருமண அழைப்பு

மணமகன்: திருநிறைச் செல்வன் தி. திருநந்தகுமார் (தலைவர்: அகில இலங்கைக் கம்பன் கழகம், ஆசிரியர்: புங்குடுதீவு மகா வித்தியாலயம்)

மணமகள்: திருநிறைச் செல்வி ஞா. தயாநந்தி விஞ்ஞானமாவி

இடம்: இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபம்

காலம்: சுக்கில ஆவணி மீ 19ஆம் நாள் திங்கட்கிழமை (4 - 9 - 1989)

சுபவேளை: காலை 9-05 முதல் 10-59 வரை

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் திருமண வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

திருநாவுக்கரசு தம்பதிகள் ஜனநாயகம் தம்பதிகள் திருவாசகம், இணுவில்.

ஞானதுரை தம்பதிகள் 'ராணி மாளிகை' இணுவில்.

க. குமாரதாசன் (செயலாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்) (1882)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கில் 50 பரப்பு தோட்டக்காணி சகல வசதிகள் கொண்ட வீட்டுடன் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எம். ஆர். எஸ். ரிம்பர் மேஜியன்ற் பிரதான வீதி, சங்கானை (1744)

எம்மிடம் அனைத்து வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] மிகப் புதிய கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மனோ டேவா ஏஜன்ஸி [புத்தகசாலை] இல. 08 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1881]

Honda Recondition C 90, C 70, C 50 Chaly CD 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. அன்ரன் என்ரபிறைசஸ், 390, மெயின் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [1872]

### இறைச்சிக் கோழி விற்பனை

V. K. M. Farm Centre Broiler கோழி, பேட்டுக் கோழி, சேவல் கோழி, விருத்திக் குஞ்சு, குப் குஞ்சு விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். No: 17/1 கனகசபை அவெனியூ, சிவலிங்கப் புளியடி, யாழ் இந்துக் கல்லூரி, பின்பக்கம். [1869]

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள் 10-09-89 இல் விநியோகிக்கப்படவுள்ளன. முன்கூட்டியே பதிவு செய்யவும். புரொயிலர், இறைச்சிக்கோழிகளும் விற்பனைக்குண்டு. பரம் ஏஜன்சி, கிளிநொச்சி (1766)

V. K. M. Farm Centre (கிறிஸ்டம்பு) புரொயிலர் குஞ்சு, பேட்டுக் குஞ்சு, சேவற் குஞ்சு [பிலிமத்] முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். 7-9-89 வியாழக்கிழமை 8-9-89 வெள்ளிக்கிழமை பதிந்தவர்கள் பெற்றுக் கொள்ளலாம்; 17/1 கனகசபை அவென்யூ, சிவலிங்கப் புளியடி [1870]

### தேவை

சோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதியில் ஏறக்குறைய (10) பத்து பரப்பு கிணற்றுடன் கூடிய தோட்டக்காணி தேவை. (II) Vespa Scooter 82 சிறிக்கு பிந்தியது தேவை. J. P. T. Ltd. 3 நவீன சந்தை, மேல் மாடி, யாழ்ப்பாணம். [C/3596]

### மணமகன் தேவை

இந்து உயர் வேளாள குல O/L படித்த 29 வயதுடைய அழகிய உதயத்தில் செவ்வாய் அமைந்த மணமகளுக்கு மணமகன் தேவை. சீதனமாக ஐந்து லட்சம் பணமாகவும் வீடு வளவும், நகையும் தரப்படும். வெளிநாட்டிற்குச் செல்லவும் அல்லது படிப்பு வசதிக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 88, C/o உதயன், யாழ்ப்பாணம். (1868)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (3601)

### I. B. M

Personal System/2 for Information on I. B. M ps/2 Local Area Networks, Communication Productst I. B M. Software Contac, Dheenan Gunaratnam, Keels Business Systems. 130, Glennie Street, Colombo 2, Phone: 422753. (2025)

### விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் மின்சார வசதியுடன் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. E. தம்பையா, 15, சென்பீற்றர்லேன் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [1885]

லவ்பேட்ஸ் (Love Birds) பல நிறங்களில் விற்பனைக்குண்டு. மனோ ரா சந்தி அருகாமையில் 340, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (1876)

### மரம் விற்பனை

வே. துரைசாமி மாஸ்டர் [யசோதா] வேரக்கேணி கந்தசாமி கோவில் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. 1 தேக்க மரம் விற்பனைக்கு உண்டு. குறிப்பு: நுணாவில் சந்தி. [1867]

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்குமிடையில் மினி பஸ்ஸில் அல்லது தரையில் சுமார் ஒன்றரைப்பவுண் நிறையுள்ள சிலுவை அடையாள பென்டனுடனான தங்கச் சங்கிலி ஒன்று கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 20, சென் பீற்றர்ஸ் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (1886)

பொன்னுச்சாமி ரவீந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை 29-8-89 அன்று நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது விக்டர் ரேடர் 245, கண்டிரோட் சாவகச்சேரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (1878)

### மணமகன் தேவை

யாழ். உயர்சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 34 வயதுடைய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியைக்கு இவரின் தராதரத்திற்கு அமைவான உத்தியோகஸ்தர் உள்நாட்டிலோ அன்றி வெளிநாட்டிலோ தேவை. தொடர்பு: ஆர். பி. ரி. அன்ரன், 21 கண்டிவீதி [கோட்டடி] சாவகச்சேரி. (1875)

யாழ் இந்து வேளாளகுல 34 வயது படித்த, அழகு, குணம், செல்வம் கொண்ட கொழும்பில் தொழில் பார்க்கும் கொழும்பில் மாடிவீடு கொண்ட பிள்ளைகள் இன்றி விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. பிள்ளைகள் அற்ற விவாகரத்துப்பெற்றவரும்; தாரமிழந்தவரும், வெளிநாட்டிலுள்ளவரும் விண்ணப்பிக்கலாம். No. 89 C/o உதயன், யாழ்ப்பாணம். (1874)

### A/L 91

91 A/L கணித மாணவர்களுக்கான கணிதம், பௌதிகம் அடிப்படைத் Theory உடன் பயிற்சிகள் சனி, ஞாயிறு 3—5 மணி வரை 3 9 89 ஆரம்பம். O/L 4 D க்கு மேலெடுத்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்க: N. நகுலேஸ்வரன், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [1862]

### விற்பனைக்கு

எட்டு வாரங்கள் நிரம்பிய அழகான இரண்டு பெண் பொமறேனியன் (பிறவுண்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (Wormed & Weaned) தொடர்பு கொள்ளவும் 122 சப்பல் வீதி, 5 ஆம் குறுக்குச் சந்தி, யாழ்ப்பாணம். (1880)

### தேவை

ஆடை தயாரிக்கும் வேலையில் அனுபவமுள்ள தெரிந்த பெண் தேவை. கை வேலை மெஷினில் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் நேரில் வரவும் V. PonnGent'sTailors, No-1, K. K. S Road, Chunnakam. (2020)

### Mutual Transfer

Lady Graduate Teacher (Botany Zoology, Chemistry) from Leading College Colombo Seeks Mutual Transfer with Lady Graduate (Similar Subjects) Jaffna District. 592 c/o Uthayan. (2017)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஹைலைன் (Hyline) சிவப்பு கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் (பிளிமத்) கறுப்பு சேவல் சிவப்புச் சேவல் ஆகியன 7-9-89 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். அத்துடன் சகல தடுப்பூசி வசதிகள் செய்து கொடுக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. தொடர்பு: S.T.R அன்சன்ஸ் மாஸ்கடை, திருநெல்வேலிச் சந்தி. (2021)

Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் பிறவுண் சேவற் குஞ்சுகள் 6 ஆந்திகதி புதன்கிழமையும் cristombu farm புரொயிலர் குஞ்சுகள் 7 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரப்படி லேன், கொக்குவில். (2084)

பண்டம் குஞ்சுகள், தாராக் குஞ்சுகள், புரொயிலர் விற்பனைக்குண்டு. எ. பா. உமாபதி மீனாட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (2031)

### தேவை

பிரபல மொத்த விற்பனை நிலையம் ஒன்றுக்கு சாமான்கள் டிலிவரி செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். சிறில் பார்மசி லிமிட் 121 1/1 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம் (2016)

### மணமகள் தேவை

இந்து வேளாள 32 வயது உடைய லண்டனில் சொந்த வீடு வைத்திருக்கும் கணக்காளருக்கு நல்லொழுக்கமுடைய அதேஇடத்தில் வசித்துவரும் மணப்பெண் தேவை. சீதனம்; குறிப்பு போன்ற முழு விபரத்துடனும் விண்ணப்பிக்கவும்; 589, C/o Uthayan (1800)

### தவறிவிட்டது

நடராசா நந்தினி ஆகிய எனது அடையாள அட்டை 30-8-89 புதன்கிழமை அன்று நல்லூர் ஆலயத்தில் பேர்சுடன் கைதவறவிடப்பட்டது. அவற்றைக் கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் [1877]

## கப்பலில் வேலைவாய்ப்புகள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு

1, Second Officer 2. Third Officer
3 Second Engineer 4. Third Engineer
5. Radio fficer
6. Bosan 7. A . B 8. Oi'er

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

முகவரி

**NATIONAL SHIPPING & TRAVELS**

New Lalitha Building
185/2 Kasthuriar Road,
Jaffna.

(3602)


# பெண்கள் தமது சக்தியை புரிந்து செயற்படவேண்டும்

## மகளிர் கருத்தரங்கில் உரை

சாவகச்சேரி, செப் 3

"எமது பெண்கள் போதிய அளவு முன்னேறவில்லை. அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும் சமுதாய மாற்ற எண்ணங்களும் இல்லாமையே இதற்கான காரணம் எனலாம். பெண்கள் தமது சக்தியைப் புரிந்து செயற்பட வேண்டும். அப்படிச் செயற்பட்டால் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் ஏற்படும்.

சாவகச்சேரி நீதிபதி திரு. க. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதர் விழிப்புணர்ச்சிக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகப் பங்கு கொண்டு அவர் உரையாற்றினார்.

மாதர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் திருமதி சரோசா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கிராமிய ரீதியில் பெண்கள் கலந்துகொண்டனர்.

தலைவர் திருமதி சரோசா சிவச்சந்திரன் பேசும்போது இன்று எம் மகளிர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்களை நல்ல தலைமைத்துவம் மிக்கவர்களாகவும், ஆளுமை உள்ளவர்களாகவும் ஆக்கும் பொருட்டு கிராமந்தோறும் இவ்விதமான கருத்தரங்குகள் நடத்தி வருகின்றோம்" என்றார்.

மற்றும் பல்கலைக்கழகப் புவியியல் பேராசிரியர் பா. பாலசுந்தரம்பிள்ளை, கல்வி அதிகாரி திருமதி புஸ்பா கனேசலிங்கம், மாதர் கல்லூரி அதிபர் திருமதி தாமோதரம்பிள்ளை, திருமதி இராஜி சண்முகநாதன், டாக்டர் சிவசங்கர் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் நன்றி கூறினார். (க - 31)

# வாகனங்களை திரும்பப் பெற முடிவு!

அலுவலக நாட்களில் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து கடமைக்குச் சமுகமளிக்காத அரச உயர் அதிகாரிகளிடம் இருந்து உத்தியோக கார் மற்றும் வாகனங்களை திரும்பப்பெற அரசு முடிவு செய்துள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் சிபார்சின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# நிவாரணம் குறித்து பேச்சுக்கள்

யாழ்ப்பாணம், செப் 3

யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்நிர்மாண வேலைகள் குறித்தும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைகள் குறித்தும் வெளிநாட்டு உதவி நிறுவன அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருக்கிறார்கள்.

தேசிய புனரமைப்புக் குழுவின் பிரதிநிதியாக பிரெஞ்சு நாட்டவரான கைநார்ட் அரேரேலட், அமெரிக்க உதவி நிறுவனப் பிரதிநிதியான திருமதி பல்ட்டியின் பமீலா லானி ஆகியவர்களுடன் கொழும்பு வதிவிட ஆலோசகர்களான திரு. தயாபரன், திரு. சிவானந்தன் ஆகியோரும் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

பிரஸ்தாப குழுவினர் வியாழக்கிழமை காலை யாழ் அரசாங்க செயலகத்தில் அப்போதைய பதில் அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்கள்.

இடம்பெயர்ந்தோருக்கான உதவி, சுயதொழில் முயற்சிக்கான உதவி, மானிய அடிப்படையில் வீடமைப்புக்கு உதவுதல் ஆகிய செயல் திட்டங்கள் குறித்து அப்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புச் சம்பந்தமான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (அ-3 13)

# தேயிலை ஏலவிற்பனை நடைபெறவில்லை

கொழும்பு, செப் 3

கொழும்பில் தேயிலை ஏலவிற்பனை இந்தவாரம் நடைபெறவில்லை.

ஏற்றுமதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் வேலைக்குச் செல்லாததே இதற்குக் காரணம் என்று தெரிகிறது. (ஒ-எ)

# உருத்திரபுரத்தில் அசம்பாவிதம்

வட்டக்கச்சி, செப். 3

உருத்திரபுரம் 7ஆம் வாய்க்கால் பகுதியில் கடந்த புதன்கிழமை இரு தரப்பினர் மோதிக்கொண்டனர்.

சுமார் அரை மணித்தியாலத்தின் பின் இரு தரப்பினரும் அடையாளம் தெரிந்து [illegible] திருத்தப்பட்டது. இதனால் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-163)

# சடலங்களை அடக்கம் செய்ய எவருமே மிஞ்சவில்லை!

கொழும்பு, செப். 03

பாணந்துறை, சுதுவல என்னுமிடத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட இலங்கை இராணுவப் பெண் சிப்பாய் அவரது தந்தை, தாய், சகோதர சகோதரிகள் மொத்தமாக ஆறு பேரின் சடலங்களையும் இராணுவமே பொறுப்பு எடுத்து அடக்கம் செய்தது.

சடலங்களை அடக்கம் செய்ய அந்தக் குடும்பத்தில் ஒருவரும் உயிருடன் இல்லாததே இதற்குக் காரணம். (இ-எ)


## ACKNOWLEDGEMENT

Members of the family of Edwin Reginald Christorpher sincerely thank sevak Rev. Sam - Alfred, Rev D R Ambalavanar, the Manager, Doctors and Staff of Mcleod Hospital Inuvil Doctors and Staff of the General Hospital Jaffna Principal and Staff of Uduvil Girls'College. the Committee Members of the C. S I. Church Uduvil and the Youth Guild, friends and relations who attended the funeral, sent messages of Condolence, Floral tributes and assisted in numerous ways.

Manipay Road.
Uduvil. (2028)

உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (07 09-89) வியாழக்கிழமை பகல் 8.47 மணிமுதல் 10 39 மணி வரையுள்ள துலா லக்கின
★ சுபமுகூர்த்தத்தில் ★

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | | எமது ஏக புத்திரி திருநிறை செல்வி |
| --- | --- | --- |
| மோகனசுந்தரம் | | கலாவதி |
| (விடமைப்புத் திணைக்களம், திருகோணமலை) அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

நல்லூர் சிவன் கோயிலில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

க. ஞானசுந்தரம் தம்பதிகள்
461, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கனகசிங்கம் தம்பதிகள்
465/24, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

[2010]

## பிரதேச கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பிரதேசப் பாடசாலைகளுக்குத் தேவையான உருக்கு / மரத்தளபாடங்கள் வழங்குதல்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான கீழ்க்காணப்படும் மர / உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள் / உருக்கு மரத்தளபாட உற்பத்தியாளர் / விநியோகத்தர்களிடமிருந்து 20 - 09 - 1989 ஆம் திகதி காலை 10 00 மணிவரை யாழ் கல்வித்திணைக்களம் கேள்விச்சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02 இவ்வலுவலகத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை (இணைப்பிரதிகளில்) இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது கை மேல் மூலையில் "பாடசாலைத் தளபாடத்திற்கான கேள்விகள்" என எழுதப்பட்டிருத்தல் அவசியம்; கேள்வி முடிவு நேரத்தில் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

03. கேள்விப்படிவங்கள், நிபந்தனைகள்; மாதிரிப்படங்கள். விபரக்கூற்றுக்கள் ஆகியவைகளை, மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ 50/- ஐயும், மீளளிக்கப்படத்தக்க வைப்புப்பணமாக ரூ 250/- ஐயும் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளரின் பெயரில் யாழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளை Pay - Order ஐ 1989 - 09 - 15 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினைச் (பொது 172) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

04. தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம் வருமாறு:-

(i) விஞ்ஞானகூட மேசை 7' X 2½' X 2½' (மரத்திலானது)
(ii) விஞ்ஞானகூட இருக்கை (Stool) 1' X 1' X 1' 10'' (உருக்கிலானது)
(iii) நூலக சஞ்சிகை இருக்கை 5' X 3' X 1' ( " )
(iv) நூலக அலுமாரி (கண்ணாடி) 6' X 3' 10'' ( " )
(v) நூலக சாதாரண கதிரைகள்
(vi) விடுதி வாசிப்பு மேசை 7' X 2½' X 2½' (மரத்திலானது)
(vii) விடுதி வாங்குகள் 7' X 1' X 1½' ( " )
(viii) விடுதி சாப்பாட்டு மேசை 7' X 1½' 2½' ( " )
(ix) உருக்கு புத்தக இருக்கை 4 தட்டுகளுடன் 60'' X 72'' X 18''
(x) உருக்கு கோவை அலுமாரிகள் 4 லாச்சிகள் 52'' X 24'' X 18'' (Steelfiling Cabinets) (20 Swg தகட்டிலானது)
(xi) உருக்கு அலுவலக அலுமாரிகள் 4 தட்டுகள் 72'' X 36'' X 18'' (20 Swg தகட்டிலானது)

செல்வி தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்,

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1989 - 09 - 02

[சி 3315]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

பொருள்:

துன்பம் வந்தபோது உடனிருந்து தாங்கவல்ல நல்ல ஆள் இல்லாத குடி, துன்பமாகிய கோடரி அடியில் வெட்டி வீழ்த்த விழுந்துவிடும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24805, 22073
யாழ்ப்பாணம்.
03 09 1989 : பெ. இல: 23

# தேசிய அரசியல் பலவீனம்

தென்னிலங்கையில் இப்போது நிலவும் நெருக்கடி நிலையை நீக்க, சமாதானமும் சகஜ நிலையும் திரும்புவதற்கான சமரசத்தை உருவாக்க, அவற்றுக்கான வழிமுறைகளைக் கண்டறிய, அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒன்றை நடத்த ஜனாதிபதி பிரேமதாசா முடிவு செய்திருக்கிறார்.

தெற்கில் மட்டுமல்ல, வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே வன்செயல்கள் ஒழிந்து அமைதி நிலவ வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் விருப்பமாகும். அக்கிரமக் கொலைகள் — அநியாயச் சாவுகள் — வேண்டாத அழிவுகள், வீண் அனர்த்தங்கள் ஒழிய வேண்டும். அச்சமற்ற, பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்வையே எந்த மனிதனும் விரும்புகிறான்.

இந்த நாட்டில் அமைதியும், இயல்பு நிலையும் குலைந்து ஆண்டுகள் பலவாகி விட்டன. அவற்றை மீளக்கொணர எடுக்கப்படும் முயற்சிகள் பூரணமாக வெற்றி அளித்ததில்லை. மாறாக நிலைமை மேன்மேலும் மோசமடைந்து, உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறதே அன்றி, சீர்திருந்தியதாக இல்லை.

அரசியல் தீர்வு என்றும், அதற்கான பேச்சுவார்த்தைகள் என்றும் முயற்சிகள் எடுக்கப்பட்டது உண்மைதான்; ஆனால் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சாராருக்கு இடையில் புரிந்துணர்வு இல்லாத தன்மையால் பேச்சுக்கள் பூரணவெற்றி தரும் வாய்ப்புக்கள் குறைந்தன. சமரசம் காணப்படும் சாத்தியங்கள் அருகின.

அரசியல் தீர்வை எட்ட முடியவில்லை. அதனைக் காண்பதில் விளைக்கெட்டு காலத்தைக் கடத்துவதை விட இராணுவத் தீர்வை நாடுவதே நல்லது என அரசாங்கம் தவறாகக் கருதியது: அதன் பலாபலன்கள் நல்ல படிப்பினைகளைப் புகட்டின. பெறுபேறுகள் தவறை உணர்த்தின.

எனினும் அரசியல் தீர்வுகளில் நம்பிக்கை கொள்வதை விடுத்து இராணுவத் தீர்வே 'உடனடி வைத்தியம்' என்று ஆட்சி பீடத்தில் உள்ளோர் நம்பி வந்தனர். பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே பேச்சுக்கள் மூலம் தீர்த்து அவற்றைக் களைவது தான் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது; ஆனால் அந்த உத்தி இந்த நாட்டில் கையாளப்பட்டது மிகக் குறைவு இல்லை என்றே சொல்லலாம்.

பிரச்சினைகள் முற்றுவதற்கு இடம் கொடுத்துவிட்டு அவை மக்களின் கழுத்தைச் சுற்றி நெருக்கும்வரை காலத்தைக் கடத்திவிட்டு, தமது தவறான செயற்பாடுகள் அணுகு முறைகளால் அவற்றை வளர்த்துவிட்டு ஆபத்தான கட்டம் வந்ததுமே ஆட்சியில் உள்ளவர்களின் தீர்வை நாடுவது இயல்பாகிவிட்டது.

அந்த வேளையிலேயே அடுத்தவர்களின் உதவியையும் நாடுவதுண்டு. அதற்கு முதல் மற்றவர்கள் சொல்லுவதைக் காதிலும் போட விருப்பமில்லாமல் இருப்பர். கடைசிக் கட்டத்தில் எல்லோரின் உதவியும் தேவை; ஆலோசனைகளும் பரிசீலனை செய்யப்படும் என்பார்கள்.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளிலாவது ஆரம்பத்தில் இருந்தே சகல தரப்பாரினதும் ஆலோசனைகளைக் கேட்கவும் கருத்து ஒற்றுமைக்கு வரவும் ஆட்சியில் உள்ளோர் ஆயத்தமானால் வேண்டாத அழிவுகளையும் அனர்த்தங்களையும் தவிர்க்கலாம்.

அந்த நடைமுறை இந்த நாட்டுக்கு ஒவ்வாதது என்று ஒதுக்கப்பட்ட ஒன்றாயிற்று; வெள்ளம் வருவதற்கு முன்னர் எல்லோரும் சேர்ந்து அணைகட்ட வேண்டும். அதுவரை அரசியலில் புரிந்துணர்வையும், விட்டுக்கொடுத்தலையும், சமரசத்தையும் நினைத்துப் பார்க்காமல் இருந்து விடுவதே இங்கு இயல்பாகிவிட்டது. வெள்ளம் வந்த பின்னர் அணைகட்டுவதற்கு எல்லோரும் ஓடி வாருங்கள்: அணைகட்டுவதற்கு என்ற நிலையே இங்கு தொடர்கிறது.

இது தேசிய அரசியல் பலவீனமாகிவிட்டது; இலங்கை அரசியலின் பெரும் துரதிஷ்டமாகிவிட்டது;

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடு தாக்கமில்லாத பெறுபேறு இல்லாமல் முடிந்தது என்பது சரித்திரமாகிவிட்டது. தென்னிலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கக் கூட்டப்படும் உத்தேச மாநாட்டுக்கும் அதே கதி ஏற்படாது என்று எப்படி எண்ணாமல் இருக்க முடியும்?

முன்னர் குறிப்பிட்ட தேசிய அரசியல் பலவீனம் நீக்கப்படும்போது தான் இந்த நாட்டில் நிரந்தர அமைதியை நினைத்துப் பார்க்க வாய்ப்பு உண்டாகும்.

## மங்களம் அருள்வாய்!

இராகம்: கானடா  தாளம்: ஆதி

பல்லவி

மங்கள கௌரி மனோகரி
திங்கள் வதனி பிலஹரி

அனுபல்லவி

சங்கம மாதுய் ஈஸ்வரி
பங்கமி லாத மகேஸ்வரி

சரணம்

தங்கப் பதுமை தவேஸ்வரி
சங்கப் பலகை சர்வேஸ்வரி
எங்கள் அம்பிகை நாரீஸ்வரி
வெங்கால ஒலியே சண்டீஸ்வரி

அ. மகாதேவன்

[இன்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் 3ஆம் திருவிழா]

## சமய சந்நிதிகளில்

### பொற்பதி விநாயகர்

கொக்குவில் செப்: 3

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 6 மணிக்கு சுவாமி வீதி உலா வருதலும் இடம் பெறும். (க - 69)

### புத்தூரில்

யாழ்ப்பாணம் செப். 03

புத்தூர் மேற்கு ஸ்ரீ விசாலாட்சி அம்பிகாசமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க)

### புளியடி வைரவர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 3

ஏழாலை கிழக்கு - புளியடி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க)

### சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம். செப். 3

வண்ணார்பண்ணை சாந்தை யர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும். (க-6)

### பண்டாரவளையில்

யாழ்ப்பாணம் செப். 03

பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேக தின வருடாந்த மகோற்சவம் நாளை 4ஆம் திகதி ஆரம்பமாகும்.

5 ஆம் திகதி பகல் 12 மணிக்கு மஹா சங்காபிஷேகம் நடைபெறும்.

ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள் பிரதம குருவாக விருந்து கிரியைகளை நடத்தி வைப்பார். [த]

### சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செப்; 03

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை 4ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். (க)

# ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெறுவோருக்கு ஊக்குவிப்பு

## அரசு சுற்று நிருபத்தில் விவரங்கள்

கொழும்பு, செப் 3

ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் மொழித் தேர்ச்சி பெறும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஓய்வூதிய உரிமையற்ற மேலுமொரு விசேட ஆண்டேற்றம் 1500/- ரூபா மிகை யூதியம் அல்லது ஒரு தொகை கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படும்;

மிகையூதியம் அல்லது தொகைக் கொடுப்பனவு சிறப்புச் சித்தி விடயத்தில் 2000/- ரூபாவாகவும் அதி சிறப்புச் சித்தி விடயத்தில் 2500/- ரூபாவாகவும் இருக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பல்வகை ஊக்குவிப்புகளை அளிப்பது பற்றி அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்: உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஜூலை 31 ஆம் திகதி வெளியிட்டுள்ள 38/89 ஆம் இலக்க சுற்று நிருபம் இவ்வாறு கூறுகின்றது:

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் பணம், வருடாந்த சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் ஆகியன பற்றி இச் சுற்று நிருபம் விவரங்களைக் கொடுக்கின்றது.

கனிமாணிப் பட்ட மட்டத்தில் மொழித் தேர்ச்சிபெறும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 5000/- ரூபா மிகையூதியம் அல்லது தொகைக் கொடுப்பனவு ஒன்றுடன் ஓய்வூதிய உரிமையற்ற மேலுமொரு ஆண்டேற்றம் வழங்கப்படும் எனவும் சுற்று நிருபம் கூறுகின்றது.

இது போலவே, அரசாங்க சேவையில் சேருவதற்கான அடிப்படைக் கல்வித்தகைமைக: பொ: த: (சாதாரண) பரீட்சை சான்றிதழாகவோ அதற்கு குறைந்த சான்றிதழாகவோ இருக்கும் உத்தியோகத்தர் தங்களுக்குப் பல்வேறு ஊக்குவிப்புகள் வழங்கப்படும் என சுற்று நிருபம் குறிப்பிடுகின்றது. (க-7)

## அசம்பாவிதங்களில் இறந்த 20 பல்கலை மாணவருக்கு ஞாபகார்த்த ஸ்தூபி

யாழ்ப்பாணம். செப். 3

கடந்த கால சம்பவங்களின் போது மரணமடைந்த யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு ஞாபகார்த்த ஸ்தூபி ஒன்றை அமைக்க மாணவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

சகலபீட மாணவர்களும் இணைந்து இந்தத் தூபியை அமைக்கத்திட்டமிட்டுள்ளனர் என்று மாணவர் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன;

அத்துடன் மரணமானவர்களின் கஷ்ட நிலையில் உள்ள இரு குடும்பங்களுக்கு பண உதவி வழங்க சகலபீட மாணவர்களால் நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது. (த - 3)

## வேம்படி மகளிர் கல்லூரி அபிவிருத்தி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

மேபல் தம்பையா மண்டபத்தில் காலை 9 - 30 மணிக்கு ஆரம்பமாகும் இதக்தகூட்டத்திற்கு பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் சமுகம் தருமாறு வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் வேண்கோன் விடுத்துள்ளார். (த)

## மாணவர் வரவு குறைவு

யாழ்ப்பாணம். செப் 3

கிளிநொச்சியில் நகர்புற பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மிகவும் குறைவாக காணப்படுகிறது.

கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு கணிசமாக உள்ள போதிலும் நகர்ப்புறப் பாடசாலைகளான கிளிநொச்சி மகாவித்தியாலயம், புனித திரேசா மகளிர் கல்லூரி, இந்து மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் மாணவர் வரவு மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது: (க-76)

## 17 - 01 - 1988 இல் நாடு திரும்பிய அகதிகளுக்கு அத்தியாவசிய பொருள்கள்

யாழ்ப்பாணம், செப்: 03

1988 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் திகதி இந்தியாவில் இருந்து காங்கேசன் துறையில் வந்திறங்கிய இலங்கை அகதிகளின் உடனடித் தேவை கருதி அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பார்சல்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் 123 கோவில் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அலுவலகத்தில் இந்த விநியோகம் நடைபெறும்.

பிரஸ்தாப திகதியில் வந்திறங்கிய அகதிகள் குடும்ப தலைவர்கள், இந்திய அரசினால் வழங்கப்பட்ட பதிவு அனுமதி அட்டை, இலங்கை அரசின் தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் வந்து பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டன. (த - 9)

## அடம்பன் அகதிகளுக்கு உணவு

கடந்த மாத முற்பகுதியில் அடம்பன் படைமுகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து திருக்கேதீஸ்வர மடங்களில் தங்கியிருந்த அகதிகளுக்கு மூன்று நாட்களுக்குரிய சமைத்த உணவை மன்னார் சர்வோதய இயக்கம் புனர்வாழ்வு அமைச்சுடன் இணைந்து வழங்கி உதவியது.

## மக்கள் முகம்

### விவசாய சலுகையும் நிவாரண உதவியும்

நான் உப உணவுத் திட்டத்திற்கமைய விவசாயம் செய்து வரும் ஒரு ஓய்வூதியம் பெறுபவர், எனக்கு உப உணவு பயிரிடும் காணிகள் உண்டு: விவசாயி என்ற ரீதியில் விவசாய அறிமுக அட்டை வழங்கப்பட்டிருக்கிறது:

ஆனால், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இன்று வரை விவசாய ரீதியிலான சகல சலுகங்களும், நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை;

எதிர்காலத்திலாவது விவசாயம் செய்யும் அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுபவருக்கும், விவசாய ரீதியிலான சகல சலுகைகளும் நிவாரணங்களும் கிடைக்கச் செய்ய கமநலசேவைத் திணைக்களம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்:

த. மயில்வாகனம்,
நயினாதீவு - 6

### மீளக் குடியமர்வு நிவாரணம்

துர்க்காபுரம் கிராம சேவையாளர் வட்டாரம் பத்து(10) பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒரு பிரிவில் திருமகள் சனசமூக நிலையம் அமைந்திருக்கிறது: இப்பிரிவின்கீழ் 27 குடும்பங்களைத் தவிர்ந்த ஏனையோருக்கு மீளக் குடியமர்வு நிவாரணம் வழங்கப்பட்டது.

நிவாரணம் கிடைக்கப் பெறுதயாம் சனசமூக நிலையம் மூலம் 08- 02- 1989இல் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபருக்கு முறையிட்டோம்; ஆனால் முதற் கட்ட நிவாரணம் இன்று வரை வழங்கப்படவில்லை: வலி வடக்கு உ. அ: அதிபர் 09 - 02 - 1989 இல் யாழ் அதிபருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இதனை தெளிவுபடுத்தினர்.

ஆகையால் தயவு செய்து முதற்கட்ட நிவாரணத்தை எமக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டிக்கொள்கிறோம்:

தா. க. திசைவீரசிங்கம்
தெல்லிப்பளை

### பல்கலைக்கழக பட்டமளிப்பு நவம்பரில்

யாழ்ப்பாணம், செப்: 3

யாழ்- பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நவம்பர் மாத இறுதியில் நடைபெற இருக்கிறது.

யாழ்- பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் நடைபெற்ற சமயம் இம்முடிவு எடுக்கப்பட்டது. (த-3)

# கடைத்தேற வழி காட்டும் கடைநாதன் திருக்கோயில்

யாழ்: வண்ணை நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய அலங்கார உற்சவப் பூர்த்தி விழாவான இன்று (3-9-89) ஞாயிறு சங்காபிஷேகமும், திருக்கல்யாண வைபவமும் நடந்தேறி சுவாமி வெளிவீதி உலாவரும் நிகழ்ச்சியையும் ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

தெய்வப்பண்பு நின்ற ஞானகுரு பரம்பரையில் வந்துதித்த பெருமகனார் சமாதியடைந்த பூமியில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தின் மூர்த்தியும், கீர்த்தியும் அளவிட முடியாதவைகளாம்; ஏனெனில் சமாதிக் கோவில்களின் அருளும் ஆசியும் நம்மவர்க்கெல்லாம் சிறந்த வழிகாட்டிகளாகும் அப்படியானதொரு நெறியில் தோன்றிய ஆலயமே கடையிற்சுவாமி சமாதிச் சிவாலயமாகும்.

இற்றைக்குக் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்னே, இவ்வில் ஒடுங்கிய குருவாம் கடையிற் சுவாமியின் சமாதியில் எழுந்த ஆலயம் இதுவாகும்.

சுமார் ஒருநூற்றாண்டுக்கு முன் யாழ்ப்பாணம் வண்ணையம்பதியில், களனியும் வாவியும் சூழ்ந்த நீராவியடியெனும் கிராமமானது பேரும் புகழும் கீர்த்தியும், மூர்த்தமும் பெற்றவரும். ஈழத்துச



கடையிற்சுவாமிகள்

சித்தர் பரம்பரையின் முன்னோடியுமான கடையிற்சுவாமிகள் நடமாடும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டது: அன்னாரது இறுதிக் காலத்தில் ஒடுக்கநிலையெய்திய பேற்றையும் இப்புண்ணியபூமி பெற்றுக் கொண்டது. இச்சமாதியின் மேலெழுந்த கோவிலே, வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயமாகும்: எனினும் மக்களால் கடையிற் சுவாமிகோவிலென்றே அழைக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வருகிறது.

... தொடக்கம் ஊர் இளைஞர்களின் பெருமுயற்சியினாலும், பெரியோர்களின் வழிகாட்டலினாலும் இந்த ஆலயத்தில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு திருக்குடமுழுக்குச் செய்யப்பட்டது.

இதன்பின் கோவில் மீண்டும் பொலிவும், மூர்த்தமும் கீர்த்தியும் பெறலாயிற்று. ஐந்துகாலப் பூசை ஒழுங்காக நடைபெற்று வருகிறது; நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும் சிறப்பே நடத்தப்படுவதமையினால் வைத்தீஸ்வரனின் கடாட்சம் ஊரவர்மேல் விழலாயிற்று.

ஆண்டுதோறும் நடைபெறும் அலங்கார உற்சவமும் இலட்சார்ச்சனையும் உள்ளூர் மக்களை மட்டுமல்லாது அயலூர் வாசிகளையும் கவர்ந்திழுத்து அருள்பாலிக்கின்றது.

வருடந்தோறும் ஆவணித் திங்களில் நடைபெறும் அலங்காரத் திருவிழாவானது ஆகம முறைப்படியும்சைவசித்தாந்த மரபுவழி பேணியும் நடைபெற்று வருவது அடியார்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதரும் செய்தியாகும். இந்தப் பத்து நாட்களும் வேதபாராயணமும், மந்திரஒலியும், ஹோமப்புகையும் கோவிலை மட்டுமல்லாது, அச்சுற்றாடலையே புனிதமயமாக்குகின்றன என்றால் அது மிகையாகாது:

வண்ணைசே. சிவராஜா

## கண்டதும் கேட்டதும்

பூனை சகுனம் கெட்டது: இது ஒரு நம்பிக்கை ஆனால் பாரதியாரோ பூனையை இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டார்.

வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை — அவை
பேருக்கொரு நிறமாகும்

இப்படிப் பாடி பூனோபதேசம் செய்கின்றார் பாரதியார்.

பூனையைக் கண்டதும் எட்டி விலகிச் செல்லாமல் மக்களின் ஐக்கியத்தைக் காட்ட பூனைக்குட்டிகளை எடுத்தாள்கின்றார் மகாகவி. அவருடைய கவிதையால் பூனைக்கு ஒரு புனிதமே பிறக்கின்றது:

எமது வாசகர் ஒருவர் எழுதிய பூனைக் கதையை வாசித்தபோது தான் நினைவுகள் மேற்கண்டவாறு நீண்டன; வாசகர் கடிதத்தைச் சற்றுப்பார்ப்போம்.

யாழ்ப்பாணம் கடையிற் சுவாமி வீதியில் ஒரு வீட்டில் பூனையொன்று அடிக்கடி தொல்லை தந்து வந்தது; இதைத் தாங்க முடியாத வீட்டுக்காரர் அதைத் தொலைத்துக் கட்ட எண்ணினார்:

ஒருநாள் காலை பூனையைக் கண்ட வீட்டுக்காரர் தடியுடன் அதைத் துரத்திச் சென்றார். பூனை அங்கும் இங்குமாக ஓடிக் கிணற்றினுள் பாய்ந்தது; வீட்டுக்காரரும் வந்த வேகத்தில் கால் இடறிக் கிணற்றில் வீழ்ந்தார்; இப்பொழுது தொல்லை கொடுத்த பூனையும் சினங்கொண்ட வீட்டுக்காரரும் ஒரே கிணற்றில்!

ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி ஒருவர் துணிகரமாகக் கிணற்றில் இறங்கி இந்த இரண்டு ஜீவன்களையும் காப்பாற்ற வேண்டியதாயிற்று.

— செய்தி லோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

ஆண்களுக்கு: தச்ச, மேசன், டிறைவர், விற்பனையாளர், பாதுகாப்பு உத்தியோகஸ்தர், ஹோட்டல் சிப்பந்திகள், சாதாரண தொழிலாளர், மோட்டார் திருத்துனர்கள், மின்சார பொருத்துனர்கள், கப்பல் மாலுமிகள், இன்னும் பல;

- ✶ சிங்கப்பூர்
- ✶ மாலைதீவு
- ✶ அமெரிக்கா
- ✶ கனடா
- ✶ ஜேர்மன்
- ✶ இத்தாலி
- ★ நியு போப குயின்யா- (அவுஸ்திரேலியா அருகில்) (New Papua Guinea)
- ★ குவைத்

பெண்களுக்கு: வீட்டுப் பணிப்பெண்கள், ஆடை தயாரிப்பாளர்கள், கடைச்சிப்பந்திகள், கோழிப்பண்ணை பராமரிப்பாளர்கள்;

- ● சிங்கப்பூர்
- ● மலேசியா
- ● குவைத்
- ● பாரயின்
- ● ஓமான்
- ● மாலைதீவு

மற்றும் சகல நாடுகளுக்குமான பயண சம்பள விபரங்களும் சகல நாடுகளுக்குமான விமான டிக்கட்டுக்களும் குறித்த திகதியில் பெற்றுக்கொள்ள ஒரு முறை விஜயம் செய்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள்;

இன்றே நாட வேண்டிய இடங்கள்:

**Quick Travels**
212, China Str,
COLOMBO - 11;

**Imran Travels**
54 2/2, Reclamation Road,
COLOMBO - 11.
T. P. No: 26381

[2014]


கடன்வசதியை நிறுத்தியதால்

# உணவு முத்திரை மூலம் பொருள்கள் விநியோகிப்பது பாதிக்கப்படலாம்

## ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் கருத்து

யாழ்ப்பாணம், செப்: 2 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள் கொள்வனவுக்குக் கடன் வசதி செய்வதில்லை என்ற உணவுத் திணைக்களத்தின் புதிய உத்தரவு, உணவு முத்திரைக்கு உணவுப்பொருள்களை நடைமுறையைப் பாதிக்குமே தவிர நுகர்ச்சிப் பொருள் வியாபாரத்தைப் பாதிக்காது; இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

பிரஸ்தாப கடன் வசதி நிறுத்தப்பட்டுள்ளது பற்றிய செய்தி நேற்றைய சஞ்சீவியில் வெளியானது தெரிந்ததே:

அந்த உத்தரவு சம்பந்தமாக பலநோக்குச் சங்க வட்டாரங்கள் பின்வருமாறு தெரிவித்தன:-

பலகாலமாக உணவுத் திணைக்களம் எமக்கு ஒரு மாதக் கடன் அடிப்படையில் மா, அரிசி ஆகியவற்றை வழங்கி வந்தது;

திடீரெனக் கடன் திட்டம் நிறுத்தப்படுமானால், சங்கங்கள் நிதி நெருக்கடியினால் இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்படும்:

### உணவு முத்திரை

உணவு முத்திரைக்கும் பொருள்கள் வழங்க வேண்டிய பொறுப்பு ப. நோ. கூ. சங்கங்களுக்குரியதல்ல: அப்பொறுப்பு வறுமை ஒழிப்புப் பகுதியினுடையதே;

மக்களுக்குப் பணியாற்ற, சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கில் நஷ்டத்தின் மத்தியிலும் ப. நோ. கூ. சங்கங்கள் உணவு முத்திரை விநியோகத்தை மேற்கொண்டுள்ளன;

உணவு முத்திரைக்குரிய பொருள்களை வழங்க அரசாங்கம் போதிய முற்பணத்தையோ, அல்லது பொருள்களையோ தரவேண்டும்: இதுவரையில் போதிய பொருள்களை அரசு தந்து வந்தது;

அந்த உதவி நிறுத்தப்பட்டால் சொந்தப் பணத்திலேயே சங்கம் செயற்படவேண்டிய நிலை ஏற்படும்: அதற்கு போதிய நிதி சங்கங்களிடம் இல்லை; இதனால் நுகர்ச்சிப் பொருள் வியாபாரம் மட்டுமே செய்யமுடியும்; மேலதிகமாக உணவு முத்திரை வியாபாரம் செய்யமுடியாது போகும்;

இதேநேரம் நாம் கூட்டுறவுத் திணைக்களத்தின் பொறுப்புடன் பெறும் வங்கிக் கடனைக் கூட பெறமுடியாது; ஏனெனில் அதற்கு வட்டி செலுத்தும்போது சங்கத்துக்கு நஷ்டம் ஏற்படும்:

இதற்கு அரச மாற்று வழி ஒன்றைக் காண்பது அவசியம்: — இவ்வாறு அந்த வட்டாரங்கள் விளக்கின: (அ-3)

## அராலிப்பிட்டி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓசை வடிவில் அடியார்களை அறை கூவுவது போன்றே தினமும் அதிகாலையில் 5 மணிக்கு ஆண்டவனின் மணி ஓசை கிராமம் முழுவதும் ஒலிப்பது ஓர் நெஞ்சை விட்டகலா நிகழ்ச்சியே; மணி ஓசையின் பின் ஒலிபெருக்கியில் திருமுறைப் பாடல்கள் ஒலிப்பதும் வழக்கு; அடுத்த கட்டமாக ஆலய மதில்கள், உள் மண்டபங்கள், கொட்டகைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. உள்வீதியில் எவ்விதத் தங்கு தடையுமின்றி எம்பெருமான் வலம்வரும் விதத்தில் உள்வீதி கொட்டகைகளினால் பாதுகாக்கப்பட்டுள்ளது இன்று ஆலயம் புதுப் பொலிவுடன் திகழ்கிறது;

1952, 1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களைப் போன்றே இம்முறையும் ஒரு குண்டம் அமைத்து நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தினை ஆலய நிர்வாகம் பொறுப்பேற்று நடாத்த 12 நாட்கள் நடைபெறும் மண்டலாபிஷேகமும் இறுதியாக நடைபெறும் சகஸ்ர சங்காபிஷேகமும் பொது மக்களின் சிவ பணியாகவே நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது: எம்பிரானின் திருக்கோயில் எழிலுருப் பெற்றுத் திகழப் பல்வகைகளில் உதவிய அடியார்கட்கும் இத் திருப்பணியை நன்கு நிறைவேற்றிய தொண்டர்களுக்கும் மஹாகும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்பாக நடாத்தவிருக்கும் சிவாச்சாரியார்களுக்கும் விநாயகர் அருள் கிட்ட பிரார்த்திக்கிறோம்;

## மாதர்சங்கம்

மானிப்பாய்ப் பட்டின மாதர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 - 00 மணிக்கு நடைபெற உள்ளது;

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறும்; இவ் வங்குரார்ப்பண கூட்டத்துக்கு ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி வி. முத்துவேற்பிள்ளை தலைமை வகிப்பார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. து: வைத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்; (க - 90)


## 21 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கா. சி. முத்தையா

தோற்றம்: 12 - 08 - 1917
மறைவு: 14 - 08 - 1989

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவனே! நீங்கள் மறைந்து 21 நாட்கள் சென்றாலும் இன்றும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகின்றீர்கள்!

13 - 09 - 1989 புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்:

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்:

[2007]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 19 - 6 -1916

உதிர்வு: 4 - 8 - 1989

மறைந்தும் மறையாத

### திருமதி ருக்குமணி செல்லத்துரை

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் ஊற்றாய் அறிவுச் சுடராய், பாசத்தின் உறைவிடமாய், தியாகத்தின் இருப்பிடமாய் வாழ்ந்தீர்! அன்பான புன்சிரிப்பாலும், இனிமையான பேச்சினாலும், எங்களைவரது இதயங்களையும் கவர்ந்த அன்பின் ஊற்றே எங்கு சென்றீரோ! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற உங்களை எப்படி மறப்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் பிரிவால் துன்புறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

17, பிள்ளைச்சர் வீதி,
கண்டுக்குளி;

(1831)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. சபாபதிப்பிள்ளை குலோத்துங்க முதலியார்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மண்ணில் மலர்வு: 11-06-1914
விண்ணில் உயர்வு: 14-09-1988

திதி: 03 09 1989

பாசத்தின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் நம்மையெல்லாம்
நேர்வழியில் செலுத்திடவே
காலமெல்லாம் கண்விழித்து உழைத்திட்ட தந்தையினை
காலனவன் இமைப்பொழுதில் கவர்ந்தாலும்
பாரினில் நாம் உள்ளவரை உம் சாந்திக்காய்
பரமனிடம் பிரார்த்திப்போம்; சாந்தி ..சாந்தி...சாந்தி;

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்;

(2023)

## ஜெனரேட்டர்கள் [Generators] விற்பனைக்கு

உங்களுக்குத் தேவையான 13 5-1000 KVA அளவுகளிலான புதிய ஜெனரேட்டர்கள் எம்மால் இங்கிலாந்தில் இருந்து விரைவில், குறைந்த விலையில் தருவித்துக் கொடுக்கப்படும்: ஒரு வருட உத்தரவாதமும் இலவச Service உம் உண்டு. Spares, after Sales & repairs நீண்டகால அனுபவம் மிக்க எமது தொழில் நுட்பவியலாளரினால் செய்து கொடுக்கப்படும்;

ஜெனரேட்டர்கள் சம்பந்தமான சகலவிதமான ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும்;

தொடர்பு கொள்க:

**Mr, M. Jogasundaram**
Yoraka Engineering (pvt,) Ltd
54, Hamer's Avenue.
Colombo 6

1790)) தொலைபேசி இல: 588590

## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma In Basic Programming**

புதிய பிரிவுகள்: 4 -9 -89 (BATCH- 1) 9. 30 A m
8 - 9 - 89 (BATCH- 2) 9. 30 A m

1st Payment Rs. 500/-

**I.D.P Computer Centre**
342, K. K. S. Road, JAFFNA
(சிவன் கோவிலடி)
Branch:- 7th mile post MALLAKAM

(C/3586)

## பெண் விற்பனையாளர்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பித்துள்ள கம்பெனிக்கு பொருட்கள் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு சகல இடங்களிலுமிருந்து பிணைப்பணம் ரூபா. 1 500/ செலுத்தக் கூடிய பெண் விற்பனையாளர்கள் தேவை: சம்பளம் விற்பனையடிப்படையில் மாதம் ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறக் கூடிய வாய்ப்புகள் உண்டு:

590, C/o, உதயன்,
யாழ்ப்பாணம்.

(2042)

## உலகளாவிய தொடர்புகள்

டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் வழங்கும்

### 24 மணி நேரச் சேவைகள்

பிரான்ஸ் - கனடாவில் உள்ள உங்கள் உறவினர்களுக்கோ, தொழில் சார்ந்த சகாக்களுக்கோ எமது பிரான்ஸ் - கனடா முகவர் ஊடாக ஃபாக்ஸ் [Fax] மூலம் துரிதமாக தகவல்களைப் பரிமாற எம்மை நாடுங்கள்:

கீழ்க் காணும் எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

**வவுனியா**
மு. காசிப்பிள்ளை
சக புத்திரர்கள்

**யாழ்ப்பாணம்**
ஸ்டுடியோ டிலகா
202 A, ஆஸ்பத்திரி வீதி

**மட்டக்களப்பு**
தமா எலக்டிரிக்கல்ஸ்
111, திருகோணமலை வீதி;

**திருகோணமலை**
ஃபியூஜிகா என்டர்பிரைசஸ்
32: ராஜவரோதயம் வீதி.

### எமது சேவைகள்:

- ★ வெளிநாட்டு (IDD) / உள்ளூர் நேரடித் தொலைபேசித் தொடர்புகள்
- ★ ஃபாக்ஸ் (FAX) வசதிகள்
- ★ டெலக்ஸ் (TELEX) / வெளிநாட்டுத் தந்தி
- ★ போட்டோ பிரதிகள் (பெருப்பித்தல் / குறைத்தல் உட்பட)
- ★ ஆங்கில தட்டெழுத்து வசதிகள்

மேல் விவரங்களுக்கு:-

**டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**

161, 1/1 காலி வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு — 4

தொலைபேசி: 501838 501839, 501840
டெலக்ஸ்: 22777, 22778, TWINS CE
ஃபாக்ஸ்: 94 - 1 - 501841

**Twins Communications (Pvt.) Limited.**

(சி-3591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி கரைப்பிட்டி விநாயகர் மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

( இன்று 3 - 9 - 1989 கர்மாரம்பம் )

கும்பாபிஷேகம் சிறப்புற
பிரார்த்திக்கின்றோம்

கைதொழுவார்க்கருளும்
கணபதியே!
தொந்தி வயிற்றோனே!
ஏழையெமக்கருள்வாயே!

**நாகேஸ்வரி றை கிளீனேர்ஸ்**
305, A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு பணிப்பெண்கள் முகவர் நிலையம்
**மல்லிகா என்ரபிறைஸஸ்**
53, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

★ **கமலா கருஜ்** ★
53/A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ 22 கரட் தங்க நகைகளுக்கு
★ **விஜி ஜுவெல்லர்ஸ்** ★
82/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**விக்னு ரியூஷன் சென்ரர்**
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ மோட்டார் உதிரிப்பாகங்களுக்கு
**விநாயகா மோட்டோர்ஸ்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ சிறந்த வீடியோ படப்பிடிப்பாளர்
★ **ஸ்ருடியோ வீனஸ்** ★
166/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


**ராஜா பிரம்பு தொழிற்சாலை**
286, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**G. P. N. CONSTRUCTION**
211/6, Palaly Road,
Jaffna.

★ **N. செல்வராசா** ★
சந்தை — வட்டுக்கோட்டை.

**ஞானம் ஹாட்வெயார்ஸ் அன் எலெக்ரிக்கல்ஸ்**
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.

★ **மிது வீடியோ மூவீஸ்** ★
பிரதான வீதி, சங்கானை.



அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய முகப்புத்தோற்றம்

## அராலி கரைப்பிட்டி ஐங்கரனின் திருவடியேற்றித் துதிப்போம்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
எம், ஏ, பி. எச். டி

தொன்மையும், வியாபகமுமுடைய விநாயகப் பெருமான் ஈழத்தில் பல்வகை ஊர்களில் பற்பல நாமங்களில் மக்களால் ஆலயமமைத்து வழிபடப்பட்டு வருகிறார். இத்தகைய ஆலயங்களில் அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயமும் முதன்மை பெறுகின்றது. இத்தகைய முதன்மைக்குக் காரணம் ஆலயத்தின் இன்றைய எழில் மிகு தோற்றம் மட்டுமன்று; இங்கு நேரந் தவறாது இறை சிந்தனையில் மக்கள் திளைக்கும் வண்ணம் ஒன்றன்பின் ஒன்றாக நேர ஒழுங்கின்படி நடைபெறும் நித்திய நைமித்திய கருமங்களே.

இவ்விநாயகராலயத்திற்குக் கரைப்பிட்டி என்ற அடைமொழி வந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவ்வாலயம் இருக்கும் இடத்தின் அருகில் குளமிருந்ததால் குளக்கரையில் உள்ள ஆலயம் கரைப்பிட்டி எனப் பெயர் பெற்றதென்பர் சிலர். இன்னும் சிலர் காரைச் செடிகள் நிறைந்த பகுதிகளில் இவ்வாலயம் அமைந்திருந்ததால் இது இப் பெயரைப் பெற்றதென்பர். கரைப்பிட்டி என்ற பதம் பிறவூர்களிலும் காணப்படுவதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. வரலாற்று ஏடுகளில் கரைப்பிட்டி வன்னியன் பற்றிய குறிப்புக் காணப்படுவதால் இதனைக் கரைப்பிட்டி வன்னியனே ஸ்தாபித்தான் எனக் கொள்வாருமுளர். போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட 'கோவிலிடிப் படலம்' அராலியையும் விட்டு வைக்கவில்லை. ஆரம்பத்தில் இவ்வூரிலுள்ள பெரும்பாலான ஆலயங்கள் போன்று செங்கட்டி, சுண்ணும்பு ஆகியவற்றால் அமைந்த இவ்வாலயம் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இத்திருத் தலத்திற்கு தனித்துவமளிப்பது கர்ப்பக்கிருகத்தின் மேலுள்ள தூபி அல்லது பண்டிகையின் எழில் மிக்க காட்சியும் மட்டுமன்றி உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி நிற்கும் விநாயகப் பெருமானின் அழகிய செப்புத்திருமேனியுமாகும். இவை இரண்டும் ஈழத்திலுள்ள பெரும்பாலான பிற விநாயகர் ஆலயங்களில் இல்லாதவாறு கலை அழகுடன் விளங்குகின்றன.

நித்திய பூசைகள் காலை 6 மணி, மதியம் 12 மணி, மாலை 6 மணி ஆகிய நேரங்களில் நடைபெறுகின்றன. நைமித்திய விழாக்கள் காலை 9 மணிக்குள்ளும் இரவு 9 மணிக்குள்ளும் ஒப்பேறி விடுகின்றன. ஒன்றன்பின் ஒன்றாகக் கிரியைகள் நடைபெறுவதற்கு வசதியாக நேர சூசிகையும் ஆலயக் கையேட்டில் இடம் பெற்றுள்ளது. இத்தகைய ஒழுங்கு முறை பல்வகைச் சிரமங்கள், சவால்கள் மத்தியிற்றான் கடந்த 15 ஆண்டுகளாக இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததையும் குறிப்பிடுதல் அவசியமாகின்றது.

நமது ஆலயத்திற்கான மகாகும்பாபிஷேகத்தின் முன்னோடியாக பாலஸ்தாபனம் 1983 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது.

பாலஸ்தாபனம் செய்து புனருத்தாரண பணிகள் பூரணமாக நிறைவேறிப் 12 ஆண்டுகள் முடிவடைவதற்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறல் வேண்டும் என்பதே.

ஆலயம் புதிய தோற்றம் பெறுது நடைபெறும் விழாக்கும்பாபிஷேகம் உண்மையானதும் பாபிஷேகமன்று. ஆலயத்தின் தோற்றத்தினைப் பார்க்கும் போதே இது அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்ற திருக்கோயில் என்ற உணர்வு ஏற்படுதல் அவசியம். ஒரு வீட்டை ஒருவர் கட்டியதற்கு அழகான வர்ணம் தீட்டி குடிபுகல் வைபவத்தை நடாத்துவது போன்றதே புனருத்தாரண பணிகள் நடைபெற்ற பின் நடைபெறும் மகாகும்பாபிஷேகமும் அமைகின்றது. குடிபுகல் நிகழ்ச்சி வீட்டுக்குரியவனை எவ்வாறு வீட்டின் அழகைக் கண்டு மகிழ வைக்கிறதோ அவ்வாறேதான் மகாகும்பாபிஷேக நிகழ்ச்சியும் தமது தலை வணங்கிய 'கோ' இருக்கும் 'இல்லின்' புதிய தோற்றத்தைக் கண்டு ஊரவரைக் களிமகிழ வைக்கும் நிகழ்ச்சியாகின்றது.

மேற்கூறிய சிந்தனையில் ஆலய வழிபாட்டில் நம்மை லயப்படுத்தும் முயற்சியின் முன்னோடியாக எம்பெருமானின் பாலஸ்தாபனம் 1983 ஆம் ஆண்டில் நடைபெற்றது. புனருத்தாரண திருப்பணிகள் பல கட்டங்களில் நடைபெற்றன. இதன் முதற் கட்டமாக ஆலயத்திற்கென 525 இறாத்தல் எடையுள்ள பெரிய ஆலயா மணி ஒன்றும் மணிக்கட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டது. விநாயகப் பெருமான்

(6ஆம் பக்கம் பார்க்க)

### கரைப்பிட்டிக் கணபதியானின் கழல்தனைப் போற்றுவோம்

அருளுடை அராலியூரில்
அழகுடன் கோயில் கொண்ட
கரைப்பிட்டிக் கணபதியானின்
கழல்தனைப் போற்று வார்க்கு
கரையிலா இன்பஞ் சேரும்
காரியம் சித்தியாகும்
விரைவினில் முத்தி கூடும்
வெற்றிமேல் வெற்றியாகும்

—வ. யோகானந்தசிவம்.

கும்பாபிஷேகம் சிறப்புற
பிரார்த்திக்கின்றோம்

வல்வினை போக்குகின்ற
வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்

**கிருஷ்ணு மெட்டல் அன் லேத் வேக்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

★ **மாலா சைக்கிள் பலஸ்** ★
பிரதான வீதி, சங்கானை,

**என். ரி. இராசரத்தினம்**
சந்தை சதுக்கம்,
சங்கானை.

**லீலா ஸ்ரோர்ஸ் அன் பேக்கறி**
சங்கானை.
கிளை: சண்டிலிப்பாய்.

**இந்திரன்ஸ் ரேடர்ஸ்**
அராலி வீதி, சங்கானை.

★ **ந. காசிப்பிள்ளை** ★
சந்தை சதுக்கம்,
சங்கானை.

★ **சேக்கிள் சென்ரர்** ★
பிரதான வீதி, சங்கானை.

**M. R. S. ரிம்பர் & ஜெனரல் மேச்சன்ட்**
பிரதான வீதி, சங்கானை,

**மொடேர்ன் பார்மஸி [MODERN]**
பிரதான வீதி, சங்கானை.

★ **யோகா பிறதர்ஸ்** ★
பிரதான வீதி, சங்கானை.

**சிம்பிலெக்ஸ் எஞ்சினியரிங் சேவிசஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**K. வைத்திலிங்கம் அன் சன்ஸ்**
சந்தை சதுக்கம், சங்கானை.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை லண்டனிலிருந்து இறக்குமதி செய்து
விநியோகிப்போர்
**சபா என்ரபிறைசெஸ்**
58, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

சிறந்த வீடியோ படங்களுக்கு
**ஸ்ருடியோ நித்திய சித்ரா**
பிரதான வீதி, சங்கானை.
தற்போது ஜெனரேட்டர் மூலம் புகைப்படங்கள் பிடிக்கப்படுகின்றன.
(1861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUSTRALIA
## அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பயில விரும்புவோருக்கு அனுமதி மற்றும் 'விசா' ஏற்பாடுகள்

**P.V. மூர்த்தி**

2 ஆம் மாடி 253, காலி வீதி
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4.
("தொமஸ் குக்" காரியாலயத்திற்கு அருகாமையில்)


## அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் 04.09.89 அன்று பி. ப 2.30 மணியளவில் குருநகரிலுள்ள யாகப்பர் ஆலய மண்டபத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டர் ஆசிரியர் குழு

(1879)


# குவைத் நாட்டில் பெண்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

50 HOSPITAL CLEANERS 4000 சம்பளம்
21 HOSPITAL SUPERVISORS 5000 ,,

வேலை 8.00 மணி நேரம்
சாப்பாடு, தங்கும் வசதி இலவசம்
உடனடிப் பிரயாணம்

மேலும் குவைத், டுபாய், அபுதாபி, சார்ஜா, ராஸல்கைமா, அல்எயின், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும்

பணிப் பெண்கள் உடனடியாகத் தேவை
சம்பளம்: 3500 முதல் 4000 வரை
டெயிலர்- சம்பளம்: 3600 முதல் 5000 வரை

மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம் 06, ஆகியவற்றுடன் உடனடியாக சமூகம் அளிக்கவும்.

**ஸ்கொயார் டூல்ஸ்**

141, செட்டியார் தெரு;
(டயமன் ஹவுஸ் மேல் மாடி)
கொழும்பு-11

தொலைபேசி: 436321 (1871)


# ஓராண்டு நினைவஞ்சலி



## தம்பிப்பிள்ளை செல்லத்துரை
(மூளாய் றோட், பிரபலவர்த்தகர்)

தோற்றம்: 12-08-1915
அஸ்தமம்: 14-09-1988

திதி: 03-09-1989

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் வந்து மென்ன வேரென நீயிருந்தாய் அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம் எம் கண்ணில் நீர் வடிந்தால் உன் நெஞ்சில் உதிரம் கொட்டிடுமே! நீங்கள் வளர்த்த அதே இலட்சியப்பாதையில் என்றும் நாம் வாழ்ந்து கொண்டு தாங்கள் நடாத்திய அதே பணியினை கடமை தவறாது உங்கள் பாதையில் நடாத்தி இன்று நடைபெறும் தங்கள் ஓராண்டு திவசத்தில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கும் எங்களை ஆசீர்வதியுங்கள்; நல்வழி காட்டுங்கள்;

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

(3599)

# கிளிநொச்சிப் பகுதிக்கும் சுழற்சி முறை மின்சாரம்

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன இயந்திர திருத்த வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 3
கிளிநொச்சிப் பகுதிக்கு சுழற்சிமுறை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் உள்ள மின்சாரம் வழங்கும் இயந்திரங்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

மின்சார உற்பத்திக்குத் தேவையான டீசல் போன்ற பொருள்கள் ஏற்கனவே தருவிக்கப்பட்டுவிட்டன என்று கூறப்படுகிறது.

மின்சார உற்பத்தி இயந்திரங்கள் திருத்தப்பட்டதும் கிளிநொச்சி பகுதிக்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-76)

## வல்லையில் தீவிர சோதனை

வல்வெட்டித்துறை, செப். 3
வல்லையில் வியாழக்கிழமை சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன. வாகனங்களும் தீவிர சோதனைக்குள்ளாகின.

வல்லைச் சந்தியிலுள்ள 'சென்றி'களில் அதிகளவில் படையினர் காவலில் நின்றனர். (ஓ-160)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்

கொழும்பு செப் 03
இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் காலை 6 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும்.

மத்தியஸ்தர் சங்க தலைவர், பொதுச்செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

ஏனைய அங்கத்தவர்கள் தெரிவு தானைய கூட்டத்தில் இடம்பெறும்.

தொடர்ந்து இரண்டாவது தடவையாக பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. ஆர். செல்வரத்தினம் [போட்டியின்றித் தெரிவான]முதலாவது தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## நகரசபைக் கடைகள்

பசிலைப்பள்ளி, செப் 3
சாவகச்சேரி நகரசபையில் பஸ் நிலையத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் பத்துக் கடைகளுக்கான வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன.

இக் கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் விரைவில் கோரப்படுமென சபை செயலாளர் த நவரத்தினராசா தெரிவித்தார். (க- 117)

## பதவி வெற்றிடம்

மானிப்பாய், செப். 3
சுன்னாகம் கொத்தணி அதிபர் பொன் நாகரத்தினம் இளைப்பாறியதைத்தொடர்ந்து மேற்படி கொத்தணி அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

மருதனாமடம் கோட்டத்தைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்கள் இருந்தும் தகுதியான பாடசாலை அதிபர் ஆசிரியர்களிடம் இருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்களை மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் கோரியுள்ளார். (க- 90)

## 4 சிப்பாய்களும் கைதாகினர்

கொழும்பு. செப். 3
காலி மாவட்டத்தில் பெரத்துடுவ என்னுமிடத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின்போது லீவில்நின்ற நான்கு இராணுவ வீரர்களையும் பொலீஸ் சேவையில் இருந்து வெளியேறிய ஒருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# சுயதொழிலில் உள்ள கஷ்டங்களை கூட்டு முயற்சியால் நீக்கலாம்

## வெளிநாட்டு உதவி நிறுவனத்தின் பிரதிநிதி உரை

மானிப்பாய் செப் 3
மக்கள் ஒன்று சேர்ந்து நிரந்தரமான தொழில் வசதிகளை மேற்கொள்ள வேண்டும். சுயதொழில்களில் எமக்கு ஏற்படும் கஷ்டங்களை கூட்டுத் தொழில் முயற்சிகளால் நீக்கி விட முடியும்.

மானிப்பாய் வடக்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு விஜயம் செய்த வெளிநாட்டு உதவி நிறுவன (Community Aid droal C. A. A) பிரதிநிதி திருமதி சாந்தி ராஜசிங்கம் இவ்வாறு கூறினார்.

வெளிநாட்டு உதவி நிறுவனமான அவுஸ்திரேலியா நிறுவனத்தின் சார்பில் திருமதி சாந்தி ராஜசிங்கம் மேற்படி சங்கத்துக்கு விஜயம் செய்து நேரில் பார்வையிட்டு தமது ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க வுள்ளார்.

இவருடன் யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய நாணயச் சங்கத்தின் சமாசத் தலைவர் திரு. எஸ். ஞானப்பிரகாசமும் வருகை தந்திருந்தார்.

மானிப்பாய் வடக்கு சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு இ.வசவிபுரம் கடந்த அசம்பாவித காலங்களில் இச்சங்கத்தின் அங்கத்தவர்களின் குடும்பத்தினர் சுமார் ஆறு லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சமாச நிர்வாக உறுப்பினர் திரு. த. சிவரத்தினம் சங்கத்தின் வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறினார்.

செயலாளர் திரு. பா. சபாரத்தினம் நன்றியுரை கூறினார். (க-90)

## கூட்டுறவுக் கடையில் கொள்ளை

கரவெட்டி, செப். 3
உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று கடந்த வார இறுதியில் கொள்ளை அடிக்கப்பட்டது.

சம்பவ தினம் பகலில் சுற்றிவளைப்பு, தேடுதல் என்பன நடந்தன. அதனால் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது. அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளையர்கள் ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றனர். (அ-70)

# கந்தரோடையில் இன்று மாட்டுவண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், செப் 3
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று சுன்னாகம் கந்தரோடை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

திரு. இளையதம்பி ஆரம்பித்து வைக்கும் இப்போட்டிக்கு ஆசிரியர் அ. தம்பித்துரை மத்தியஸ்தம் வகிப்பார்.

ஏ. பி. சி. என்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படும்.

சுன்னாகம், கந்தரோடை வர்த்தகர்கள் விவசாயிகள் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். (இ-9)


**GNANAMS STUDIO**

Kodak Fuji, Tudor, Forte Colour Konica
படச்சுருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**

301, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(சி8316)



# காணிகள் விற்பனைக்கு

1. சூராவத்தை புனித திரேசா ஆலயத்துக்குக்கிட்ட கமச்செய்கைக் காணிபரப்பு 10, குளி 16
2. சூராவத்தை அம்மன் கோவிலுக்குக் கிட்ட பரப்பு 7
3. சுன்னாகம் குமாரசுவாமி புலவர்வீதி (கொத்தியாலடி) தொழிற்சாலை நடத்தியகாணி பரப்பு 10, குளி 12, சுற்றுமதில், கட்டிடம், குழாய்க்கிணறு, 1300 கன்று கமச்செய்கைத் தறையுடன்.

தொடர்பு கொள்க:
**R. E. JOSEPH**
குமாரசுவாமிப்புலவர் வீதி,
சுன்னாகம்.

(சுன்னாகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் நீர்ப்பாசன கிணற்றுக்கு அருகில்)

(2 18)


# 41ஆம் நாள் நினைவஞ்சலி



## சின்னத்தம்பி செல்லாச்சி

தோற்றம்: 23 - 01 - 1912
மறைவு: 25 - 07 - 1989

எங்கள் இதயக்
கோயிலே அம்மாவே!
எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் இருந்து எமக்
கெல்லாம் நல்வழிகாட்டிய
அன்புத்தாயே! இன்றுடன்
உங்களைப் பிரிந்து நாற்பத்
தொரு நாளம்மா!
உங்கள் நினைவுகள்
என்றும் எங்களை விட்டு
அகலாதம்மா!

என்றும் உங்கள் பிரிவால்
துயருறும்:
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அல்லையம்பதி
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.



## திருமதி சடாச்சரம் தங்கம்மா
(அரசமணி)

மலர்வு: 25 - 12 - 1944
உதிர்வு: 25 - 07 - 1989

குலமகளே குணக்குன்றே
குல விளக்கே மணியே!
சிறப்பும் இனிமையும் கருணையும்
எழிலும் சார்ந்த திருவுருவம்
எம்மை எல்லாம் மகிழ்விக்கும் - இனிய
வார்த்தையும் கொண்ட மணியே!
வாழும் வயதில்
பாழும் விதி பிரித்ததுவே!
ஆல விருட்சமாய் அன்பு நிழல் தந்த
சோலையாய் நீ இருந்த சொர்க்கம் சென்றது ஏனோ?
மழலையுடன் மணி நீ - எழில்
கொஞ்சும் வேளையிலே
கொடுங்காலன் உனை அழைத்தது தான் ஏனோ?
ஆடி மாத வேளையிலே
பொங்கி எழும் கண்ணீரில் - உன்
குடும்பத்தைக் கண் கலங்க வைத்து
விண்ணுலகு புகுந்தாயே
நினைவுகளோ ஓயவில்லை - உங்களைப்
பிரிந்ததால் வேதனைகள் குறையவில்லை
மணியே இந்நாளில் அல்ல - உம்மை
நாம் எந்நாளுமே மறவோம்:

உம் ஆத்ம சாந்திக்காய் எம் இதய விளக்கேந்தி
கண்ணீர் மலர் தூவி ஏந்து கரம் தந்து நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர்: சடாச்சரம்,
மகள்: நந்தினி, இந்துமதி.



## செல்வி சாந்தினி சடாச்சரம்
(சாந்தி)

மலர்வு: 1968 - 02 - 22
உதிர்வு: 1989 - 07 - 25

வெண்புறு சிறகொடிந்து
விண் சென்று
நாற்பத்தொரு நாளோ?
விடியலைக் காணவில்லை
வேதனை தான் மறையவில்லை
சீருடன் வாழ்வாயென்று
சிந்தித்து நின்ற வேளை
நீ எமைப் பிரியுமாறு
நேர்ந்ததை மறக்கலாமோ!
கறையிலா வாழ்வு வாழ
பிரிந்து நீ சென்ற வேளை
கலங்குதோ எம் இதயம்
கண்ணே
நீ பிரிந்த வேளை!
என்றுமே எம் மனதில் உம்
நினைவு நிறைந்திருக்கும்.

அப்பா (சடாச்சரம்),
தங்கைமார்
(நந்தினி, இந்துமதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதூறு வழக்கில் சாட்சியமளிக்க அமெரிக்கா செல்லும் 93 வயது மொரார்ஜி

சிக்காகோ செப். 2

அமெரிக்கப்பத்திரிகையாளர் செய்மூர் ஹெர்ஷ் என்பவர் மீது 10 கோடி டாலர் மானநட்ட ஈடு கோரி இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் தொடர்ந்த வழக்கு இம்மாதம் 13 ஆம் திகதி சிக்காகோ மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

எட்டு வாரங்கள் வரை நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இந்த வழக்கு விசாரணையில் சாட்சியளிப்பதற்காக 93 வயதான திரு. மொரார்ஜி தேசாய் அமெரிக்கா செல்வார் என்று அறிவிக்கப்பட்டது.

திரு ஹெர்ஷ் 1983 இல் 'அதிகாரத்தின் விலை' என்ற ஒரு புத்தகத்தை எழுதினார். மொரார்ஜி தேசாய்க்கும் அமெரிக்காவின் சி ஐ ஏ நிறுவனத்துக்கும் தொடர்பு இருந்ததாக திரு. ஹெர்ஷ் அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்தார்.

1983 இல் இரண்டு தடவைகள் திரு. மொரார்ஜி தேசாய் சிக்காகோ சென்று இவ் வழக்கைத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, விசாரணைக்குத் திகதி நிச்சயிக்கப்படுவதற்காக கடந்த வாரம் சிக்காகோ நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

திரு. தேசாயின் சார்பில் வழக்கறிஞர் சிரியால் சபீன ஆஜராகி விசாரணைக்காக திரு. தேசாய் சிக்காகோ வருவார். அவர் நல்ல சுகதேகியாக இருக்கிறார் —என்றார்.

ஹெர்ஷின் புத்தகத்தில் திரு. தேசாய் நாட்டுத் துரோகி என்று கூறப்பட்டிருக்கிறது: "யாராவது என்னை கூடாத பிரதமர் என்று கூறியிருந்திருப்பின் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன்; ஆனால் பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்தவன் என்று என்னைக் கூறுவதை நான் ஏற்க முடியாது'' இப்படி — திரு. தேசாய் கூறியிருக்கிறார். (எ)

● இணக்கமின்றி சர்வதேச மாநாடு முடிவு;

# சிவில் யுத்தத்தின் விளிம்பில் கம்போடியா; பாரீஸில் பிரதமர் ஹுன்செண் அறிவிப்பு!

## கெமர்ரோச் தாக்குதலை ஆரம்பிக்க இருப்பதாகவும் எச்சரிக்கை

பாரிஸ் செப். 2

கம்போடியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவது சம்பந்தமாக பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வந்த சர்வதேசமாநாடு, உடன்பாடு எதுவும் ஏற்படாமல் கடந்த புதன்கிழமை முடிவடைந்தது.

இம் மாநாட்டில் 19 நாடுகள் கலந்து கொண்டன;

வியட்னாம் துருப்புக்கள் விலக்கப்பட்ட பின்னர் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதுடன் கம்போடிய அரசு மற்றும் மூன்று கெரில்லாக் குழுக்களும் அங்கம் வகிக்கும் அரசு ஒன்றை அமைப்பது சம்பந்தமாக இம் மாநாட்டில் எதுவித இணக்கமும் ஏற்படவில்லை.

ஒரு மாதகாலமாக நடந்து வந்த இச்சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட கம்போடியக் குழுக்கள் பரஸ்பரம் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தின.

இதன் காரணமாக சமாதான நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைப்பது என்றும் இறுதி உடன்பாடு காணுவதற்கான உரிய அடிப்படை உருவானவுடன் மாநாட்டை மீண்டும் கூட்டுவது என்றும் பாரிஸ் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னர் கம்போடிய பிரதமர் ஹுன் செண் செய்தியாளர் மத்தியில் பேசினார், அவர் சொன்னதாவது;

இம் மாதம் வியட்னாம் படைகள் கம்போடியாவில் இருந்து வெளியேற உள்ளன. இந்த நிலையில் சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்து உள்ளன.

வியட்னாம் துருப்புக்கள் வெளியேறுவதற்கு முன்னரே கெமர்ரோச் போராளிகள் எமது படைகளைத் தாக்குவதற்கு தயாராகி வருகின்றனர்.

மோசமான சிவில் யுத்தம் ஒன்றுக்கு நாம் தயாராகி வருகின்றோம்.

இப்படி பிரதமர் ஹுன் செண் சொன்னார். (எ)

# போதை செய்த வேலை; பேதைக்கு ஆயுள் தண்டனை!

டெட்ரோயிட் செப் 02

போதைவஸ்து வாங்குவதற்காக பட்ட கடனைத் திருப்பி தருவதற்காக தனது மகளைக் கற்பழிக்க அனுமதித்த ஒரு தாய்க்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று ஆயுள்கால சிறைத் தண்டனை விதித்தது.

தாயின் பெயர் சுசான் பார்ப்பர்.

மானபங்கம் செய்த 28 வயது இளைஞன் அந்தோனி சோவர் என்பவருக்கு இன்னொரு நீதி மன்றத்தில் நீதிபதி 40 முதல் 60 வருடங்கள் வரையான சிறைத் தண்டனையை விதித்தார். அவர் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

தாய்க்கு ஆயுள் தண்டனை விதிக்கையில் நீதிபதி, "மகளை மானபங்கப்படுத்த அனுமதிக்கக் கூடிய அளவிற்கு போதை வஸ்து பாவனையின் தாக்கம் இருக்கும் என்று நான் கேள்விப்படவே இல்லை'' என்று கவலை தெரிவித்தார். (எ)

# அணிசேரா இயக்க உச்சி மாநாடு நாளை ஆரம்பம்!

பெல்கிறேட், செப் 2

அணிசேரா இயக்க மாநாடு நாளை திங்கட்கிழமை யூகோஸ்லேவியா தலைநகர் பெல்கிறேடில் ஆரம்பமாகிறது;

147 நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் மன்னர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்;

9ஆவது உச்சி மாநாட்டின் போது அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவியை யூகோஸ்லேவியா ஏற்றுக் கொள்ளவிருக்கிறது.

தற்போதைய தலைவரான சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே சம்பிரதாய பூர்வமாக தலைமைப்பதவியை யூகோவிடம் ஒப்படைப்பார். (எ)

# பாக்- காஷ்மீர் எல்லையில் இந்திய படைரோந்து தீவிரம்

புதுடில்லி, செப் 2

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை ஒட்டியுள்ள இந்திய பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் ரோந்துப் பணியைத் தீவிரப் படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் மீது கூட்டு நடவடிக்கை எடுப்பதில் பாரா இராணுவ துருப்புக்களும் காஷ்மீர் பொலீஸும் ஈடுபட்டுள்ளன (எ)

# பூமிசூடாகிவருவதனால் முதல் பாதிப்பு ஏற்படவுள்ள வடதுருவப்பிராந்தியம்!

வடதுருவப் பிராந்தியத்தின் சுற்றுச் சூழலைக் காக்க ஆர்க்டிக் கடலைச் சுற்றியுள்ள எட்டு நாடுகளும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டும் என்று ஆர்க்டிக் பிராந்தியத்தில் உள்ள பின்லாந்து கேட்டுக் கொண்டுள்ளது;

பின்லாந்து இந்த வேண்டுகோளை விடுத்த அதே சமயத்தில் ஆர்க்டிக் பிராந்தியத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் பூமி சூடாகிவரும் பிரச்சினை சம்பந்தப்பட்ட தங்களது ஆராய்ச்சியை ஒருங்கிணைக்க முயற்சித்து வருகின்றனர்;

**யோசனை**

பிரான்ஸ் நாட்டின் ஆர்க்டிக் ஆய்வுக் கேந்திரம் பாரிஸ் நகரில் சமீபத்தில் நடத்திய கூட்டத்தில், பின்லாந்தின் பிரதிநிதி மேற்படி ஒப்பந்த யோசனையை வெளியிட்டார்.

இது தொடர்பான திட்டத்தை பின்லாந்து ஏற்கனவே ஆர்க்டிக் வட்டத்துக்குள் தனது பிராந்தியங்களைக் கொண்ட அமெரிக்கா, ரஷ்யா, கனடா ஆகிய நாடுகளுக்கும் ஆர்க்டிக் வட்டத்துக்குள் அமைந்த ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் முதலிய நாடுகளுக்கும் அனுப்பியிருந்தது.

வடதுருவத்திலிருந்து 23½ பூமத்திய ரேகைக்கு இணையான கற்பனைக் கோடு ஆர்க்டிக் வட்டம் (Arctic Circle) என்று குறிப்பிடப்படுகிறது;

ஆர்க்டிக் பிராந்தியத்தில் கடலும் காற்று மண்டலமும் கெடாமல் பாதுகாக்கவும், அங்குள்ள வன விலங்குகளைக் காக்கவும் இப்பிராந்தியத்தில் அணு உலைக் கழிவுகள் கொட்டப்படாமல் தடுக்கவும் உடன்பாடு செய்து கொள்ளப்பட வேண்டும் என்று பின்லாந்து கூறியுள்ளது.

**பாதுகாப்பு**

தற்போதுள்ள சர்வதேச ஒப்பந்தங்கள் ஆர்க்டிக்கில் உள்ள துருவக் கரடிகளுக்கும் மறைமுகமான அளவில் வலசைபோகும் பறவைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கின்றன என்று பின்லாந்து பிரதிநிதி சுட்டிக் காட்டினார்.

இவற்றைத் தவிர தற்போதுள்ள ஒரே ஒப்பந்தம் ஆர்க்டிக்கில் கழிவுகளைக் கொட்டக்கூடாது என்று கட்டுப்படுத்துகிறது.

மற்றபடி ஆர்க்டிக்கைப் பாதுகாக்க வேறு ஒப்பந்தம் எதுவுமில்லை; கடல் பிராந்தியங்கள் பற்றிய ஆதிபத்திய உரிமை பற்றிக் கூறுகிற கடல் சட்டத்திலும் ஆர்க்டிக் யாருக்குச் சொந்தம் என்பது பற்றித் தெளிவாக எதுவும் இல்லை என்று பின்லாந்து பிரதிநிதி குறிப்பிட்டார்.

ஆர்க்டிக் பிராந்தியத்தில் காற்றும் நீரும் பேலும் மேலும் மாசுபட்டு வருகிறது. நாடுகள் ஒன்றுபட்டு ஏதேனும் செய்யாவிட்டால் ஆர்க்டிக் பிராந்தியம் விபரீதமான அளவுக்குப் பாதிக்கப்படலாம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரிட்டனின் ஸ்காட் நினைவு துருவ ஆராய்ச்சி நிலைய டைரக்டர் பீட்டர் வாத்ஹாம் இதுபற்றி எச்சரித்துள்ளார். பூமி சூடாகி வருவதாகப் பல நிபுணர்களும் குறிப்பிட்டு இதுபற்றி வெவ்வேறு கொள்கைகளைக் கூறியுள்ளனர். எது எப்படியிருந்த போதிலும் பூமி சூடாகி வருவதன் விளைவுகள் முதலில் ஆர்க்டிக்கில்தான் தோன்றும் என்று அவர் கூறினார்.

எனவே வருகிற ஆண்டுகளில் ஆர்க்டிக்கில் எங்கு பார்த்தாலும் அடர்ந்து காணப்படுகிற ஐஸ் கட்டிகளின் பருமன் குறைந்துவிடலாம்;

ஆர்க்டிக் பிராந்தியத்தில் கப்பல்களின் நடமாட்டம் எளிதாகி விடலாம்.

எனவே ஆர்க்டிக்கில் மசகு எண்ணெய், எரிவாயு ஆகியவற்றை எடுப்பது சுலபமாகி அதன் விளைவாகப் பல பிரச்சினைகள் ஏற்படலாம் என்றும் அவர் சொன்னார்.

எப்படியிருந்தபோதிலும் உலகின் பருவ நிலையில் மாறுதல் ஏற்படுகிறதா என்பதை அறிய ஆர்க்டிக் ஒரு முக்கிய சோதனைக் கேந்திரமாக விளங்கும் என்றும் அவர் சொன்னார்;

# 181 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:

09-06-1967

மறைவு:

03-03 1989

திரு. நல்லையா கிருபாகுமாரன்

வெற்றியும் தோல்வியும் சமமாக நோக்கினீர்
முற்றும் துறந்த முனிவர் போல்
சமாதி நிலையே அடைந்தீர்
ஆளும் பெற்ற தாய் தந்தை
மனைவி மகள் மற்றும் உமைநேசித்தோரெல்லாம்
பற்பல பிறவி எடுத்தாலும்
உமைக்கனவிலும் மறவாரே!

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, மனைவி,
மகள், மாமா, மாமி

இந்துபாடசாலை வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை: (2017)

★ மருத்துவப் பல்கலைக்கழகத் திறப்புவிழாவில்:

# குறட்பாக்கள் மூலம் எம். ஜி. ஆரைப் பாராட்டி, கிண்டித்து கலைஞர் உரை!

சென்னை, செப். 2

டாக்டர் எம் ஜி ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தை ஜனாதிபதி வெங்கடராமன் கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்;



எம். ஜி. ஆர்.

முதலமைச்சர் கருணாநிதி பல்கலைக்கழகக் கட்டடங்களுக்கான அத்திவாரக்கல்லை நாட்டு வைத்தார்;

ஜனாதிபதி வெங்கடராமன் பேசுகையில்,

'1987 டிசம்பரில் எம் ஜி ஆர் உயிருடன் இருந்த போது அவரது பெயரிலான இப் பல்கலைக் கழகத்தை நான் திறந்து வைக்க இருந்தேன்; அன்று அவரது கையில் மலர்ச் செண்டாக வழங்கப்பட்டிருந்திருக்கும்; ஆனால் இன்று இந்தப் பல்கலைக்கழகம் எம் ஜி. ஆருக்கு மலர் அஞ்சலியாக வழங்கப்படுகிறது'.

'இப் பல்கலைக்கழகத்திற்கு எம் ஜி ஆரின் பெயரைச் சூட்ட முடிவு செய்யப்பட்ட போது அமெரிக்காவில் எம் ஜி ஆர் சிகிச்சை பெற்று வந்தார். தனது பெயர் சூட்டப்படுவதை எம் ஜி ஆர் அமெரிக்காவில் இருந்தே எதிர்த்தார். ஆனால் அவரது சகாக்களின் நிர்ப்பந்தத்தினால் அதற்கு அவர் இணங்க வேண்டியதாயிற்று'— இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

முதலமைச்சர் கருணாநிதி தனது உரையை குறள் ஒன்றைக் கூறி ஆரம்பித்தார்.

முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத்தகம் நக நட்பது நட்பு — என்ற குறளைத் தெரிவித்த திரு: கருணாநிதி நானும் எம் ஜி. ஆரும் கலை, சினிமா மற்றும் அரசியலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து செயலாற்றி வந்திருக்கின்றோம்' — என்று கூறினார்;

தனது பேச்சின் இறுதியில் திரு: கருணாநிதி ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்''— என்ற குறளைக் கூறி, 'உயர்மட்டக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க இப் பல்கலைக் கழகத்திற்கு எம்; ஜி. ஆர் பெயரைச் சூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது'— என்று சொன்னார்:



கருணாநிதி

கருணாநிதியின் பெயர் அரசு கட்டடம் ஒன்றிற்குச் சூட்டப்பட்டதை ரத்துச் செய்ய எம். ஜி ஆர் தனது ஆட்சிக் காலத்தில் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தார்; அதை மனதில் வைத்து திரு. கருணாநிதி 'இன்னா செய்தாரை ஒறுத்தல் ……' என்ற குறளைப் பாவித்தார்:


# தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்



ஷப்ருவை நாடுங்கள்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்,
பல் கட்டுபவரும்!



P. I. பர்ஞண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

03 09 1989 ஞாயிற்றுக்கிழமை

பல் கட்டுபவரும்,
கண்ணாடி தருபவரும்!



கிளை:
P. I. பர்ஞண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனு வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தர்மகிருஷ்ணர் சந்திராதேவி

திருமதி த. சந்திராதேவி அவர்கள் 02-09-1989 அன்று அதிகாலையில் அகால மரணமடைந்தார்.

இவர் தர்மகிருஷ்ணர் (உரிமையாளர், கண்ணன் அச்சகம், நல்லூர்) அவர்களின் அன்பு மனைவியும், கிருஷ்ணவேணி, கிருஷ்ணலீலா, கிருஷ்ணப்பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாச்சிமார் கோயிலடி சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், சந்திரசேகரன் (நகர சபை, சாவகச்சேரி) சித்திராதேவி (அக்சராயன் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ. தங்கராசா (உரிமையாளர், திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்) தம்பதியின் அன்பு மைத்துனியும், திருமதி லோகநாதன் ரஞ்சனியின் (பிரான்ஸ்) சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் தகன கிரியைகள் 02-09-1989 சனிக்கிழமை நல்லூர் செம்மணி மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

இல 88, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

[1918]

### திரு. ஐயம்பிள்ளை சின்னையா

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னையா 2-9-89 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், ஞானசேகரம் (கனடா) திலகமலர் (கனடா), ரஞ்சிதமலர் (ஜேர்மனி), சந்திரசேகரம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலிங்கம் (ஜேர்மனி), ஏகாம்பரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பொன்னுச்சி காலஞ்சென்ற சின்னத்தங்கம் இளையதம்பி, நடராசா, தில்லையம்பலம், செல்லம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணபிள்ளை, மங்கையர்க்கரசி, சற்குணநாதன், தேவி, சிறிகாந்தன், வசந்தா, ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை 4-9-89 காலை 11 மணியளவில் நாவலர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்,
சி. சந்திரசேகரம்

ஸ்ரான்லி கல்லூரி அருகாமை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,

(2043)

### கனக தண்டிகை கணபதிப்பிள்ளை பொன்னம்பலம்

கனக தண்டிகை கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் 1-9-89 மாலை 3 மணியளவில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் காலமானார். இவர் காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனக தண்டிகை கணபதிப்பிள்ளை சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காரைநகர் சத்திரந்தையில் வசிப்பவரும், ஸ்கந்தபுரம் விவசாயியும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற க. நல்லைசம்பி (B E M மலேசியா) க. சண்முகம் (The Pacific Star, Malaisia) காலஞ்சென்ற திருமதி க. பொன்னம்மாள், திருமதி க. சிவகாமி, காலஞ்சென்ற திருமதி ஆ இராசம்மா, க. பேரம்பலம், திருமதி அ. வள்ளியம்மை, திருமதி சு. விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வி திலகவதி, குழந்தைவேலு (உரிமையாளர், கே. கே. எலெக்ரோனிக்ஸ், காரைநகர், யாழ்ப்பாணம்) திருமதி ப. சரஸ்வதி, கெங்காதரன் (உரிமையாளர், விநாயகர் ரெக்ஸைல்ஸ், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி) சரவணபவான், திருஞானசம்பந்தன், காலஞ்சென்ற இராசலட்சுமி, இராமன், இலட்சுமணன், லலிதா, பாக்கியலட்சுமி, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமரர் வி. பஞ்சலிங்கம், கு. மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐங்கரனின் அன்புப் பேரனும், திருமதி ந. சரஸ்வதி, காலஞ்சென்ற வெ. கந்தையா, காலஞ்சென்ற மு. ஆறுமுகம், வே. இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற வே. அருணசலம், காலஞ்சென்ற மு. சுந்தரப்பிள்ளை, காலஞ்சென்ற மு. பரமு, காலஞ்சென்ற M. S. T. கந்தையா, சிவராசா, திருமதி க. நல்லம்மா, திருமதி ஆ. கனகம்மா, திருமதி சு. பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. ச. மு. விஜயரத்தினம் (காதர் ஸ்ரோர்ஸ், கொழும்பு) திருமதி க. ஆறுமுகம் ஆகியோரின் அன்பு சம்பந்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 3-9-89 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் காரைநகர், சத்திரந்தை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்திரந்தை,
களபூமி,
காரைநகர்.

தகவல்:
பொ: குழந்தைவேலு
(Prop: K. K. E)

(C/3607)

## வேலைக்குச் செல்லத் தவறிய செயலாளர்கள் சிக்கலில்!

கொழும்பு, செப் 3
கடந்த வாரம் நடந்த வேலை நிறுத்தத்தின் முதல் நாளான ஆகஸ்ட் 28 ஆம் திகதி அன்று கடமைக்குச் செல்லத் தவறிய அமைச்சுச் செயலாளர்கள், துணை அமைச்சுச் செயலாளர்கள் ஆகியோரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஜனாதிபதி செயலகம் ஈடுபட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அவரது செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸ சகல அமைச்சு, துணை அமைச்சுச் செயலாளர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

''ஆகஸ்ட் 28 இல் அலுவலகம் சென்றீர்களா?'' — இப்படி கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், தகுதிவாய்ந்த அதிகாரிகள் ஆகியோரும் ஆகஸ்ட் 28 இல் அலுவலகம் சென்றூர்களா என்பதை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமைச்சர்களையும் ஜனாதிபதியின் செயலாளர் கேட்டுள்ளார்.

அப்படி சமுகமளிக்கத் தவறிய அதிகாரிகளிடமிருந்து விளக்கம் கோரும்படி அமைச்சர்கள் கோரப்பட்டுள்ளனர்.

[உ-எ]

## பாஸ்போர்ட் பெறுவதற்கு கட்டுப்பாடு தளர்வு

தேசிய அடையாளக் கார்ட்டைத் தொலைத்தவர்கள் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால் பிரதேச உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம சேவையாளரின் கடிதத்தை சமர்ப்பித்தால் போதும் என பாஸ்போர்ட் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

கிராமசேவையாளரின் கடிதத்தில் தொலைந்துபோன தேசிய அடையாளக் கார்ட்டின் இலக்கம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று பிரதிக் கட்டுப்பாட்டதிகாரி டி. ஜெயசிங்கா தெரிவித்தார்.

(உ-எ)

### அனைத்துக் கட்சி மாநாடு:

## அழைப்பு கிடைத்த பின்பே சிறிமா முடிவு செய்வார்

கொழும்பு, செப். 3
அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்வதா என்பதுபற்றி ஜனாதிபதி பிரேமதாசாவிடம் இருந்து அழைப்புக் கிடைத்த பின்னரே தீர்மானிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

மாநாடு எந்த நோக்கத்திற்காக கூட்டப்படுகிறது என்பது தெளிவாகவில்லை. ஜனாதிபதியிடமிருந்து அழைப்புக் கிடைத்ததும் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்போம் என்றும் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (எ)

## முதியோர் இல்லத்திற்கு வர்த்தகர்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 3
கைதடி முதியோர் இல்லத்திற்கு யாழ்நகர வர்த்தகர்கள் நேற்று அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த அன்பளிப்பில் 177 பேருக்கு பாய், தலையணை, தலையணை உறை, துவாய் என்பனவும், ஒரு கிடாரமும் அடங்கியிருந்தன.

யாழ்நகர வர்த்தகர்களின் சார்பில் யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் திரு ஏ. கே. நடராஜா, செயலாளர் திரு கி. நமசிவாயம் ஆகியோரும், திரு. கே. சிவப்பிரகாசம், திரு. வி. கே. குணரத்தினம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். அமைதிப் படையின் அதிகாரி திரு. மஞ்சித் சிங்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

(உ

## இந்திய ஜனாதிபதி இருந்த மேடையில் திடீரென தீ!

சென்னை, செப். 3
கிண்டி கைத்தொழில் பேட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி வெங்கடராமன் கலந்து கொண்ட விழாப்பந்தலின் ஒரு மூலையில் தீப்பிடித்துக்கொண்டது.

உடனே ஜனாதிபதி, அவரது மனைவி ஜானகி அம்மாள், ஆளுநர் அலெக்ஸாண்டர், அவரது மனைவி அக்கம்மா ஆகியோர் பந்தலில் இருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டனர். பத்து நிமிடங்களில் தீ அணைக்கப்பட்டது.

மின்சாரஒழுக்கு காரணமாக தீப்பிடித்தது என்று விசாரணையின் போது தெரியவந்தது.

பந்தலுக்கு மின்இணைப்புக் கொடுத்த ஒப்பந்தக்காரர் கே. நாராயணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது பின்னர் வழக்கு ஒன்று பதிவாகியது.

(உ-எ)

### மீண்டும் வெளியூர் சேவை

வட பிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் கொழும்பு மற்றும் திருகோணமலைக்கான தமது சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கிறது.

### யுத்த அபாய துறைமுகமாக கொழும்பு!

லண்டன், செப். 3
லண்டனில் உள்ளபிரபல காப்புறுதி நிறுவனமான ''லொயிட்ஸ்'' கொழும்புத் துறைமுகத்தை 'யுத்த அபாயம்'' (War risk port) உள்ள துறைமுகமாக பிரகடனப்படுத்தி உள்ளது.

இதனால் கப்பல் காப்புறுதி கட்டணங்கள் நீண்ட தாமதங்களுக்கான மேலதிக கட்டணத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் அறிவித்துள்ளது.

(உ-எ)

### தற்கொலை முயற்சி!

யாழ்ப்பாணம், செப் 3
யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று அளவுக்கதிகமான நித்திரைக் குளிசைகள் சிலவற்றை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

யாழ் போதனு வைத்தியசாலையில் தாதிகளுக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயமே இவர் நித்திரைக் குளிசைகளை உட்கொண்டாராம்.

பின்னர் இவர் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். (உ-9)

### மாநகரசபை உறுப்பினர் குத்தப்பட்டார்

கொழும்பு: செப்: 3
கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மாப்பா பெர்னண்டோ கடந்த வியாழன் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத மூவரால் கத்தியால் குத்தப்பட்டார்.

அவர் தற்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-எ)

### வன்செயல்களை . . .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

அரசாங்கம் வன்செயல்களைக் களையத்தவறி விட்டது என்றும் ஜனாதிபதி ஆட்சிமுறை தோல்வி கண்டு விட்டதாகவும் அந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### எதிர்க்கட்சிகள் -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக எல்லா எதிர்க்கட்சிகளையும் அணிதிரட்டி வலுப்படுத்தும் முயற்சிகள் தலைநகர் கொழும்பில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பல மட்டத்திலும் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் இணக்கம் காணப்படுமானுல் நாட்டின் அரசியல் நிலைமை மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து எதிர்க்கட்சிகளின் கருத்து ஒரே குரலில் வெளிப்படுத்தப்படும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிருர்கள். (உ)

### அரசமைப்பை--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி பதவியில் இருந்து பிரேமதாஸ விலகி—

நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாக உள்ள பிரதமரிடம் ஆட்சிப் பொறுப்பை வழங்கும் அரசமைப்பு முறை கொண்டுவரப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையை ஓரளவு ஆதரிப்பதுபோல் அமைச்சர் அத்துலத்முதலி கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

அவர் மேலும் சொன்னதாவது—

அவசியம் ஏற்பட்டால் பொதுத் தேர்தல் கூட நடத்தப்பட வேண்டும்.

அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய அரசமைப்புக்களில் நிர்வாக அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இலங்கை அரசமைப்பில் இல்லை.

நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இணக்கம் ஏற்படாதபோது நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது.

நாட்டில் செய்திஸ்தாபனங்கள் ஒரு பக்கச் சார்புடைய செய்திகளை வெளியிடுவதற்கு வானெலி, டெலிவிஷன் ஆகியன அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதுதான் காரணம்.

—என்றும் அவர் சொன்னுர். (உ-எ)

## ஆந்திராவில் நரபலி!

ஆந்திரமாநிலத்தில் ஒன்பது வயதுடைய ராமலட்சுமி என்ற சிறுமி நரபலி கொடுக்கப்பட்டாள்.

தனது புதிய தியேட்டர் லாபகரமாக இயங்கவேண்டும் என்பதற்காக அதன் உரிமையாளர் இந்தச் சிறுமியை அவளின் வளர்ப்புத் தந்தையிடமிருந்து 4 ஆயிரம் ரூபாசிற்கு வாங்கி நரபலி கொடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கமலபுரம் கிராமத்தில் நடந்ததாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

[உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. முத்துக்குமாரு பாலசிங்கம்

[வண்ணை செந்தில் கதிர்வேளாயுதசுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் தலையாளி, கொக்குவில்]

கோண்டாவில், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துக்குமாரு பாலசிங்கம் அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு பொன்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் இராசலட்சுமியின் அன்புக் கணவனும், மகாலட்சுமி, மனோன்மணி, பூமணி, புனிதவதி ஆகியோரின் அருமைச் சகோதரரும், சரோஜாதேவி, இரதிதேவி, காலஞ்சென்ற சுஜித்தாதேவி, இந்திராணி, விமலாதேவி, பத்மநாபன், ஸ்ரீசாகுலன், அருணாதேவி, வனஜா, வதனு, சுகுணு ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகசுந்தரம், தியாகராஜா குலசேகரா, இளஞ்செல்னி, தகராஜ் பத்மினி, சுரேஸ்குமார், சிவஞானம், இரகுநாதன, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலா, கண்ணன், நித்திலா, மிதிலா, சுஜித், ஜனனி, நளினி, பிரசாந்தி, கார்த்திகேயன், பார்த்திபன், நாரணி, கமலன், ஆதவன், சுகித்தா, சரன், கௌதமி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 03-09-1989 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 00 மணியளவில் அன்னாரின் 'பத்மகிரி' தலையாளி, கொக்குவில் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,

(1917)

### திரு. கந்தையா இராமலிங்கம் மதியாபரணம்

(உரும்பராய்)

மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பராய் கிழக்கு வாசியுமான திரு. க. இ. மதியாபரணம் (ஓய்வு பெற்ற இலிகிதர் - மாவிட்டபுரம் மடகெதர எஸ்ரேட், மத்துகமம்) 01.09.89 ஆம் திகதி அகால மரணமானார். அன்னார் திருமதி இலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் திருமதி அம்பிகை யோகி அவர்களின் அன்புத் தந்தையாரும், திரு. நடராஜன்சிவபாலன் (பொலிஸ் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 03 09 89 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
நடராஜன் சிவபாலன்
பொலீஸ் உத்தியோகத்தர்
யாழ்ப்பாணம்

(1884)

### திருமதி சூசை அல்பேட்டின் எட்வீனம்மா

நாவாந்துறையைச் சேர்ந்த எட்வீனம்மா 1-9-89 இல் காலமானார்.

இவர் திரு. சூசை அல்பேட்டின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை (பரியாரி காணிக்கை), திருமதி செ. காணிக்கை மரியை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சூசை திவ்வியம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசை, சுரத்தப்பிள்ளையின் பேத்தியும், அந்தோனிப்பிள்ளை ஆனுசிமுத்துவின் மருமகளும், அன்றூட், எட்வின், ரொபேட் அன்ரனி (பிரான்ஸ்), யூட், கெமன்சன், வின்சன், தீபா ஆகியோரின் நேசத் தாயாரும், மரியதாசன், எட்வேட் (யாழ். மாவட்ட பராளுமன்ற உறுப்பினர்), பிருண்சிஸ்கம்மா, அரியட், அன்ரன் (S A. N. உரிமையாளர்), யோண்மேரி, சூசைதாசன் (பிரான்ஸ்), அமலதாசன் ஆகியோரின் சகோதரியும், மகராசம்பிள்ளை, மார்க்கு [லாசர்], சின்னக்கிளி, அரியராணி, மரியதாஸ், ஞானம், யோகவதி, அரியம், அரியரூபன் (பிரான்ஸ்), புஷ்பராணி [பிரான்ஸ்], பஞ்சராணி [பிரான்ஸ்], செனியூட் [பிரான்ஸ்] ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று [03-09-89] ஞாயிறு மாலை 3.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக நாவந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
அல்பேட் சின்ராசா.

''தந்தை இல்லம்''
கடற்கரை வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

[1889]

இப்பத்திரிகை ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் ... லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் 03-09-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org